விலை: 60.00
பக்கங்கள் - 20
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka







# வலம்புரி

சங்குநாதம்
சங்கு 26
ஒலி 073 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 18 ஞாயிற்றுக்கிழமை (02.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை

### செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்க முயற்சி



04ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி அலுவலகத்துக்கு

## சொந்தமான சொகுசு வாகனங்கள் ஏலம்

(கொழும்பு)

ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான 14 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட 6 வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்கத்தின் செலவுகளை

19ஆம் பக்கம் பார்க்க

தமிழினத்தின் நலன் கருதி

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக

# மீண்டும் ஒன்றிணைய வேண்டும்

### ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம்; ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



வட்டுவாகல் விகாரையின் கீழ்

## 2009ஆம் ஆண்டு யுத்தத்தில் சரணடைந்தோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம்

### ஆய்வு மேற்கொள்க; நீதியமைச்சரிடம் கோரினார் ரவிகரன் எம்.பி



கொழும்பு)

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டு வட்டுவாகல் விகாரையின் கீழ் புதைக்கப்பட்டிருக்கலாம். எனவே அது குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு நீதியமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் 19ஆம் பக்கம் பார்க்க

## மோடி - ரணில் சந்திப்பு




19ஆம் பக்கம் பார்க்க

## வட மாகாணத்தில் மழை தொடரும்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பல இடங்களில் இடியுடன் கூடிய மழைக்குச் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் நாட்டின் கிழக்கு, தென், ஊவா ஆகிய மூன்று மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் 19ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடு குளத்தின்

### வான் கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையினால், இரணைமடுக் குளத்தில் நீர்வரத்து அதிகரித்து 19ஆம் பக்கம் பார்க்க

பாதாள உலகத்துக்கு

## அரசியல் தலைவர்கள் பொலிஸார் ஆதரவு

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள், பொலிஸார், பாதுகாப்பு மற்றும் ஏனைய அதிகாரிகள் உட்பட பல துறைகள் பாதாள உலகத்தை ஆதரித்து வருவதாக ஜனாதிபதி அநுர குமார திஸா 19ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வை வழங்குங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

(அநுராதபுரம்)

எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நேற்றிரவு (நேற்று முன்தினம் இரவு) முதல், எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு அரசாங்கத்தோடு ஏற்பட்ட நெருக்கடியால் நாட்டு மக்கள் மிகுந்த நிர்க்கதிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

எரிபொருள் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தத்தை எவ்வித கலந்துரையாடலும் இன்றி தற்போதைய அரசாங்கம் திடீரென நிராகரித்துள்ளமையால், தற்போது பெரும் எரிபொருள் வரிசை உருவெடுத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் கையாலாகாத தனத்தாலும், நாட்டை ஆளமுடியா நிர்வாகத் திறனின்மையாலும் ஏற்பட்ட நெருக்கடியே இது வாகும்.

எனவே, இந்த நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும். இதனால் அழுத்தத்திற்கு உள்ளாவது ஜனாதிபதியோ, பிரதமரோ, அல்லது அமைச்சர்களோ அல்ல, சாதாரண மக்களே இதற்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே, எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாகத் தீர்வுகளை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# எரிபொருள் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் அமளி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று பெரும் அமளி ஏற்பட்டது.

எரிபொருள் பற்றாக்குறையை உருவாக்க ஒரு தீய நடவடிக்கை இருப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியதையடுத்து, எரிபொருள் விநியோகப் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் அமளி ஏற்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டைப் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த மற்றும் சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க இருவரும் முன்வைத்தனர். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) அதன் பங்குகளைப் பெறும் நேரத்தில் நிலவும் விலையில் 3 சதவீத விலை உயர்வைக் கணக்கிட முடியும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

பிரச்சினை என்னவென்றால், விநியோகஸ்தர்கள் நிகர விலைக்கு விலை உயர்வை விரும்புகிறார்கள். நீதிமன்றத் தீர்ப்பின்படி இதை அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் ரத்நாயக்க கூறினார்.

சமூக ஊடகங்கள் மூலம் ஒரு பீதி நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் ஜெயந்த கூறினார்.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது என்று நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம் என்று அவர் கூறினார். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கயந்த கருணாதிலக, டி.வி. சானக மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் பற்றாக்குறையைத் தவிர்க்க அரசாங்கம் நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அரசாங்கம் நிலைமையைத் தீர்க்கத் தவறினால் ஞாயிற்றுக்கிழமைக்குப் பிறகு பற்றாக்குறை ஏற்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சானக கூறினார். (ம-7)

## யாழில் மழை காரணமாக

# 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்பு

யாழில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/166 கிராம சேவகர் பிரிவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்த நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## தமிழ்த் தேசிய...

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தங்கள் மூவருடனும் கலந்துரையாடியது என்று தலைப்பிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதில் இக்கலந்துரையாடல் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களது கட்சிகளும் எமது கட்சியும் இணைந்து ஒன்றாகப் போட்டியிட்டது போல இந்தத் தேர்தலிலும் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய்வதற்கே ஆனது. இது சம்பந்தமாகக்கலந்துரையாடல் எதிர்வரும் 3ஆம் திகதியை செல்வம் அடைக்கலநாதன் உடன் நிர்ணயித்திருந்தோம்.

எனினும் அந்த முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது தாங்கள் எமது கட்சியைத் தவிர்த்து வேறு ஒரு கூட்டணியை கடந்த 23 ஆம் திகதி உருவாக்கியமை ஏமாற்றம் அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் அமைந்தது. இது எமக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியமை இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

நாம் இந்த முயற்சியை மேற்கொண்டது தனிய தேர்தலுக்காக அல்ல. எமது முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன். இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகிறேன் இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால் நாம் தொடர்ந்து பேசலாம்.

அதேநேரம் நாம் தனித்து போட்டியிட்டாலும் தேர்தலுக்குப் பின் இணைந்து வடக்கு - கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல். இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால் நாம் தொடர்ந்து பேசலாம். தங்களது துரித பதிலுக்கு நன்றி உடையவராவோம் என் றுள்ளது. (ம-7)


## பதவி வெற்றிடம்

- **உதவி ஆசிரியர்**
  (35 வயதுக்கு மேல், இருபாலாரும்)
- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** (பகல் கடமை)
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)
- **பராமரிப்பு பணியாளர்கள்**
  (சுத்திகரிப்பாளர், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3127 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் செட்டித்தெரு, இராசாவின் தோட்டம் TCT Supermarket (நாவலர் சந்தி) இல் 6 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகவோ / 3 பரப்பாகவோ பிரித்து தரப்படும்.
1 பரப்பு: 2.25 Crores (NO BROKERS)
**077 060 4125**
Whatsapp :
**076 367 8333**
(C-085)

## காணி/ கட்டிடம் விற்பனை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியில் 25 அடி அகலமும் 135 அடி நீளமும் ஏறத்தாழ 1½ பரப்பும் கொண்ட வர்த்தக மாடிக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. கீழ்த்தளத்தில் ஒரு உணவகமும் மேற்தளத்தில் காரியாலயம் மற்றும் குளியறைகள் உடனான தங்கும் அறைகள் உண்டு. (3553)
**077 953 0496**
தரகர் தேவையில்லை

## தேவை

- யாழ். நகரிலுள்ள வீட்டில் வயோதிபரை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
- யாழ். நகரிலுள்ள வீட்டை சுத்திகரிப்பதற்கு சுத்திகரிப்பாளர் தேவை. (ஆண்/ பெண்)

தொடர்புகளுக்கு :
**077 623 7416**
(C-2357)

புதிய வாகன வருகையை முன்னிட்டு வடமாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி....

உங்களிடம் பாவனையிலுள்ள மோட்டார் கார்/ வாகனங்களை தகுந்த விலைப்படி விற்கவும் மற்றும் புதிய வாகனங்களை மிகச் சிறந்த விலையில் கொள்வனவு செய்யவும் உங்களுக்கு ஓர் சிறந்த வாய்ப்பு...
மேலதிக தகவல்களுக்கு :
**076 693 2227, 077 623 7416**
(C-2357)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306**
**021 222 9306**
(3354)

## A/L PHYSICS & CHEMISTRY

Personal & Group class
**076 230 6081**
(3552)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை உறுதிபடத் தெரிவித்தது அரசாங்கம்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உருவாகியுள்ள வரிசைகள் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இரவு முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. இந்நிலையில் எதிர்க்கட்சியினர் நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசை யுகம் மலர்வதாகக் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் போதே பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நாட்டில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவும் நாட்டில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவவில்லை எனவும், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளது போன்றதொரு பின்னணியை உருவாக்குவதற்கு சில குழுக்கள் முயற்சிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டினார். (நி-8)

# மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகும் எண்ணமில்லை

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அனுபவமற்றவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினராகும் எண்ணம் தனக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிற்கும் தெரிவித்ததாக ரணில் தெரிவித்தார்.

“பெராரிரக வாகன உரிமம் உள்ளவர்கள் , எல் போர்ட் உரிமம் உள்ளவர்களுடன் நேரத்தை செலவிடுவதில்லை” என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் உள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற இளம் வழக்கறிஞர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து, ரணில் மீண்டும் பாராளுமன்றத்திற்குத் திரும்ப உள்ளதான ஊடக அறிக்கைகளை மேற்கோள்காட்டி ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் நாடு திவாலான போது தான் ஏற்றுக்கொண்ட சவாலினை வெற்றிகரமாக நடத்தியமை தொடர்பில் பணிவான மகிழ்ச்சி இருப்பதாக கூறிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் நாட்டின் பொறுப்பை ஒரு புதிய குழுவிடம் ஒப்படைத்துள்ளதால் அந்தக் குழு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை முறையாக நிறைவேற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (நி-8)

# 334 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்க ஐ.எம்.எப் ஒப்புதல்

(கொழும்பு)

நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு மேலும் 334 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை நேற்று முன்தினம் ஆராய்ந்திருந்தது.

இதன் தொடர்ச்சியாக இலங்கைக்கு அடுத்த கட்ட கடனுதவியை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்குக் கிடைக்கப் பெறும் கடனுதவி 1.3 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கிறது.

இந்நிலையில் சமூக செலவினங்களுக்கான இலக்கைத் தவிர ஏனைய அனைத்து இலக்குகளிலும் அளவு மட்டத்தை இலங்கை அடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா தெரிவித்துள்ளார். (நி-8)

# அரச கரும மொழியாக தமிழ், சிங்களம் அறிவிக்கப்பட வேண்டும்

## மனோ எம்.பி இடித்துரைப்பு



(கொழும்பு)

கடந்த காலங்களில் 13ஆம் திருத்தச் சட்டம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் கருத்துரைத்த அரசாங்கம் தற்போது அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நிதியமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையை சிங்கள, பௌத்த நாடு என மட்டுப்படுத்த வேண்டாம்.

இது தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் வாழும் நாடாகும்.

தொடர்ந்தும் அரசியலமைப்பு விடயம் தாமதமடைந்து வருகின்றது. எனவே, அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வகையில் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் புதிய அரசியலமைப்பில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளும் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும்.

அதேநேரம் சகல அரச நிறுவனங்களிலும் இரு மொழிகளிலும் மக்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (நி-8)

# 2030 இற்குள் இராணுவத்தினரை குறைப்பதற்கு திட்டம்



(கொழும்பு)

2030 ஆம் ஆண்டுக்குள் இராணுவம் 100,000 ஆகவும், கடற்படை 40,000 ஆகவும், விமானப்படை 18,000 ஆகவும் மட்டுப்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பணிபுரிபவர்களின் அளவைக் குறைத்த போதிலும், அதனைத் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட இராணுவமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சிறப்புரை ஆற்றினார். அவ் வேளை அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத்திற்குச் சொந்தமான ஏராளமான விமானங்கள், இராணுவ ஆயுதங்கள் மற்றும் கப்பல்கள் காலாவதியாகும் நிலையில் உள்ளன. மேலும் இதுபோன்ற சூழ்நிலை நாட்டிற்குச் சாதகமாக இல்லை.

தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட உபகரணங்களை வழங்குவதும், மேம்பட்ட சிந்தனை கொண்ட தொழில்முறை இராணுவமாக அதை மாற்றுவதும் தனது அரசாங்கத்தின் குறிக்கோள்.

இராணுவத்தை அரசாங்கத்துக்கு நம்பிக்கையான இராணுவமாக மாற்றுவதற்கும் தான் பணியாற்றி வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார். (நி-8)

# யால பூங்கா செல்லத் தடை

(கொழும்பு)

மழை குறையும் வரை யால தேசிய பூங்கா மறு அறிவித்தல் வரை மூடப்படும் என யால தேசிய பூங்காவின் பராமரிப்பாளர் மனோஜ் வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக பெய்த அடைமழை காரணமாக யால தேசிய பூங்காவின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் பூங்காவில் உள்ள சில ஏரிகளின் கரைகள் உடைந்துள்ளன.

இதனால் வன விலங்குகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பூங்காவை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (நி-8)

# மாவை சேனாதிராஜாவுக்கு பிரித்தானியாவில் அஞ்சலி






(லண்டன்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் 31 ஆவது நினைவு நாள் பிரித்தானியாவில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது, ஹெரொவ் ஆர்ட்ஸ் சென்டரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இதன்போது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2025. 02. 19 ஆம் திகதி எமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளமான https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்கத் தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து கொள்ளலாம். அதன் பின் தங்கள் தொலைபேசிக்கு அனுப்பப்படும் குறுந் தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தக்கம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள்





(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் நேற்றுக் காலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாக எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து எரிபொருளுக்கான வரிசை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 3 சதவீத தள்ளுபடியை இரத்து செய்ய கனியவள கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தது.

இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33-60)

# பொதுக்கூட்டம்

(பொற்பதி)

கரைச்சி பிரதேச அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தம் பொதுக்கூட்டம் எதிர்வரும் 06. 03.2025 காலை 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் வருகை தருமாறு அரச சேவை நம்பிக்கை நிதியத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-254)


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



திருமதி.
**இராஜேஸ்வரி சந்திரலிங்கம்**
(2022.06.29-2025.03.02)

சீரான கல்வியால் தாம் சிறப்புற்று
மாணவர்க்கும் நல் நேரான வழிகாட்டி
நிஜமாய் நின்றுழைத்த
சைவ சமய ஆசிரியை
பேரான பேர் பெற்று
கல்விப் பெருந்தொண்டில்
ஓய்வுற்ற வேரான எம் பள்ளியின் விருட்சம்
வீறாக என்றும் விளங்க வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம் (3537)
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலை

## சேவை நலன் பாராட்டு



**திருமதி.பிறேமசேழினி லிங்கசபேசன்**
( SLTS-I)
(BA, PGDE. வரலாற்றுப் பாட ஆசிரியர்)
யா/வீமன்காமம் மகாவித்தியாலயம் - தெல்லிப்பழை
(2023.01.02-2024.12.05)

எங்கள் பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர் திருமதி.பி.லிங்கசபேசன் அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதோடு அவரது ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம்


# இராசிபலன்

02.03.2025
மாசி 18, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பின்னிரவு 1.02 மணிவரை

உத்திரட்டாதி பிற்பகல் 12.19 மணிவரை
சுபநேரம் 9.27-10.57 மணிவரை
இராகுகாலம் 4.57-6.27 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்** சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், சயனசுகக் குறைவுண்டு.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மகரம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** தொழில்வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பொறுமையால் பெருமை சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

வெற்றியின் சிறந்த பயன் மன்னித்தலே ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உள்ளகப் பொறிமுறை தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுத்தருமா?

அபிமன்யு

தமிழினத்தின் இறுதி அத்தியாயம் முள்ளிவாய்க்கால் என்றால் அதற்கு மாற்றுக்கருத்தேதும் கிடையாது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான யுத்தம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும், அந்த யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்களே.

ஆம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் நடந்த பெரும் யுத்தத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பே அழிந்து போனது.

உலக வரலாற்றில் பல யுத்தங்களை இப்பூமி சந்தித்திருந்தாலும் கனவிலும் நடந்திராத கொடூரங்களும், கொடுமைகளும் அழிவுகளும் அத்துமீறல்களும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தது உண்மை.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான போரில் பல இலட்சம் அப்பாவி உயிர்கள் பறிபோனதை ஏற்றுக்கொள்ள முடியாதாயினும், அந்த இழப்புக்களுக்கும், தமிழினம் பட்ட வலிகளுக்கும் நீதி கிடைத்ததா எனின் இல்லை என்பதே பதில்.

தசாப்தம் கடந்தும் தமிழினத்திற்கான உரிமைகளைத் தர எந்த அரசுகளும் தயார் இல்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்ற மீறல்கள் தொடர்பில் பலமான ஆதாரங்கள் பல வெளியாகியிருந்த போதிலும், அதற்கான நீதியான விசாரணைகளோ, பரிகாரங்களோ இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

இவை ஒருதலைப்பட்சமானதும், ஓரவஞ்சகத்தனமுடையதுமான செயற்பாடுகளையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழினமும் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதை மறந்து, பேரினவாத சிந்தனையுடன் செயற்படும் அரசுகளின் கோர முகத்தையே இது காட்டி நிற்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் வலுப்பெறும் நிலையில் இருந்த போது ஜனாதி பதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ படுதோல்வியடைந்தார். தொடர்ந்து நல்லாட்சி என்ற போர்வையில் மைத்திரிபால சிறிசேன ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றினார்.

இக்காலப்பகுதியே சர்வதேசத்தினூடாக ஈழத் தமிழினத்துக்கு நீதியை பெற்றுத் தரவல்ல காலமாக இருந்த போதிலும், எம் தமிழ்த் தலைமைகளின் ஆளுமையீனத்தால் அது கைநழுவிப் போனது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர் குற்ற மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கையின் குரல்வளை நசுக்க, இலங்கை அரசுக்கு அவகாசம் வழங்குங்கள் என எம் தமிழ்த் தலைமைகள் விட்ட பெரும் தவறு இன்று பெரு விருட்சமாகி நிற்கிறது.

துரதிஸ்டம் இலங்கை அரசுக்கு எதிராகவும் ஈழத் தமிழினத்துக்கு ஆதரவாகவும் பிரேரணையை நிறைவேற்றிய அமெரிக்கா இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தில் இருந்து வெளியேறி இருப்பது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இதில் உலகின் பல்வேறுபட்ட விடயங்கள் பேசு பொருளாக அமைந்திருந்தாலும் இலங்கை தொடர்பிலும் அவதானிக்கக்கூடிய விடயங்கள் பேசப்பட்டிருக்கிறன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டங்கள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கையை சர்வதேச அளவில் கவனம் பெறச் செய்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் உரையாற்றியிருந்தார்.

இக்கூட்டத் தொடரில் பங்கேற்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றுகையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வு வழங்க அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற வன்முறைகளை விசாரிப்பதற்கு ஆணைக்குழு அமைக்கப்படும். குறித்த ஆணைக் குழுவிற்கு முழு அதிகாரங்களும் வழங்கப்படும். ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும் அதிகாரங்களினூடாக பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும் என தெரிவித்திருந்தார்.

உள்ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை என ஐ.நா சபையில் தமிழ்த்தரப்புக்கள் பலமுறை கூறியிருந்த நிலையில் அநுர அரசு மீண்டும் உள்ளக விசாரணையை கையில் எடுத்திருப்பது எந்தளவிற்கு வெற்றியைத் தரும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகியதுமே இலங்கையில் இனவாதிகளின் பேச்சு வேகமெடுக்கத் தொடங்கிவிடும்.

அந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபை படையினருக்கு எதிராகச் சதி செய்கின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இனவாதியுமான சரத் வீரசேகர தெரிவித்திருக்கின்றார்.

இதற்கு ஒருபடி மேலே சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் மனித உரிமைகள் மீறல் குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தேவையில்லை தெரிவித்திருக்கின்றார்.

நல்லாட்சி அரசு காலப்பகுதியில் பிரதமராக இருந்து, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த படுகொலைகளுக்கு பொறுப்புக்கூற ஐ.நாவிடம் கால அவகாசம் கேட்ட ரணில் விக்கிரமசிங்க இப்போது ஐ.நாவிற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கத் தேவையில்லை என்று கூறுவது அபத்தம்.

இலங்கையில் புதிய ஆட்சி மலர்திருக்கிறது. இன, மத பேதமின்றி நாட்டு மக்கள் ஒன்றிணைந்து தேசிய மக்கள் சக்தியை ஆட்சி எனும் அரியணையில் ஏற்றியிருக்கிறார்கள்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு சிங்களக் கட்சி ஒன்றை தமிழ் சமூகம் அங்கீகரித்திருக்கிறது எனின், அதற்கு அந்த அரசு தகுந்த கைமாறைச் செய்தாக வேண்டும்.

அந்தக் கைமாறு பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத் தருவதாக அமைந்தால் நன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சுமுகமான சூழலை ஏற்படுத்துங்கள்



திருமதி.ஆனந்தி சூரியப்பிரகாசம்



விக்ரர்.ஐவன்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இலண்டன் பி.பி.சி.தமிழோசையில் மிகச் சிறந்த அறிவிப்பாளராக இருந்த திருமதி.ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆனந்தி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செவ்வியை பிபிசி தமிழோசையில் ஒலிபரப்புச் செய்து உலகத் தமிழ் மக்களிடம் பெரும் புகழைப் பெற்றிருந்த ஆனந்தி சூரியப்பிரகாசத்திற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

மூத்த சிங்களப் பத்திரிகையாளர், ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஐவன் அவர்கள் காலமாகிவிட்டார்.

இலங்கையின் அரசியலில்- ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதில் விக்ரர் ஐவனின் எழுத்துக்கள் நிறைந்த வகிபங்கை ஆற்றின.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அது சரி, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில ஈடுபட்டிருப்பதாகக் கேள்விப்பட்டன் என்ன சங்கதி.

**கங்காணி:-** எல்லாம் உள்வீட்டு முரண்பாடுகள் தான்.

**மூப்பர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** மருத்துவ நிபுணர்களுக்கிடையே கடும் போட்டி நிலவுவது வழமை தானே.

அந்த கண் சத்திர சிகிச்சை நிபுணருக்கு ஆளணி கொடுக்கப்பட்டிருக்குது. ஆனால் இந்த சத்திர கிசிச்சை நிபுணர் கேட்ட ஆளணி இன்னும் தரப்படவில்லை, என்பதான நிலையில யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எதிராகப் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஈடுபட்டிருக்குது.

**மூப்பர்:-** என்ன இருந்தாலும் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பால எங்கட நோயாளர்கள் பாதிக்கப்படக்கூடாது.

தொடர் போராட்டம், அவசர சிகிச்சைகள் மட்டும் தான் இடம்பெறும் என்ற முடிவுகளை யார் எடுத்தாலும் அது நோயாளர்களைப் பாதிக்கிறதாக இருக்குமேயல்லாமல், தனித்து யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

ஆகையால இது தொடர்பில அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நிதானமாக முடிவுகளை எடுக்க வேணும்.

பொதுவில யாழ்ப்பாணத்தில மருத்துவத்துறைக்குள்ளால தான் ஒரு பெரும் பூகம்பம் வெடித்தது.

அந்தப் பெரும் பூகம்பம் மக்கள் சமூகத்திலும் அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை நாங்கள் மறக்கக் கூடாது.

இந்த நிலையில, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை திருப்தியான சேவையை மக்களுக்கு வழங்குகிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகுது.

இந்த நேரத்தில போய் பணிப்புறக்கணிப்பு, சட்டப்படி வேலை என்று தொடங்கினால், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

**சிறாப்பர்:-** மூப்பர் சொல்லுறது நூறு வீதம் சரி, அதேநேரம் உள்ளக முரண்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதில் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் கண்ணும் கருத்துமாக இருக்க வேணும்.

ஏனென்டால் நோயாளர்களுக்குத் தரமான மருத்துவ சேவையை வழங்க வேணும் என்பதைவிட, [illegible] பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிராகச் செயற்பட வேணும் எண்ட எண்ணம் ஒரு குறிப்பிட்ட மருத்துவர்களிடம் இருப்பதைக் காண முடிகிறது.

அதேநேரம் இப்படியான வேலைநிறுத்தங்கள் மூலம் நோயாளர்களை தனியார் வைத்தியசாலைகளுக்கு அனுப்புகின்ற நோக்கம் உண்டு என்பதான பிரசாரமும் செய்யப்படலாம்.

ஆகையால நோயாளர்களுக்கு எந்தப் பங்கமும் எந்தக் காலத்திலும் ஏற்படாதவாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் அங்கு பணியாற்றுகின்ற மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களும் பார்த்துக் கொள்ள வேணும்.

உங்கட ஈகோ பிரச்சினைக்கு நோயாளர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பது மிகவும் கட்டாயமானது.

**சாத்திரியார்:-** எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில சிங்கள நோயாளர்கள் அநேகர் சிகிச்சைபெற வருவதாக அறிகிறன்.

அதிலும் குறிப்பாக கண் சத்திர சிகிச்சை செய்வதற்காக அநுராதபுரம், மதவாச்சி, புத்தளம் ஆகிய பகுதிகளில இருந்து சிங்கள நோயாளர்கள் பலர் இங்க வருவதாகக் கேள்வி.

இவ்வாறு சிங்கள நோயாளர்கள் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையில கடமையாற்றுகிற சிங்களத் தாதியர்கள் மற்றும் சிங்கள மருத்துவ சேவையாளர்கள் காரணமாக இருக்கினம்.

**விதானையார்:-** ஓ! அது சரி தங்கட உறவுகள் பணிபுரிகிற வைத்தியசாலையில சிகிச்சை பெறுவதில் திருப்தி இருக்குது தானே.

**சாத்திரியார்:-** விதானையார், நான் அதைச் சொல்லல்ல. வைத்தியசாலைகள் எண்டால் அங்க எவரும் சிகிச்சை பெறலாம். ஆனால் நான் என்ன சொல்லவாறன் எண்டால், எங்கட யாழ்.போதனா வைத்தியசாலையில நோயாளர்களை அனுமதிப்பதற்கான கட்டில் வசதிகள் போதுமானதாக இல்லை. அதேநேரம் எங்கட வடக்கு மாகாணத்திற்கான ஒரே ஒரு போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில மட்டும் தான் இருக்குது.

இந்த நேரத்தில வட மாகாணத்தில இருக்கிற நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலேயே யாழ். போதனா வைத்தியசாலை திண்டாடுது.

இங்க ஒப்பரேசன் செய்யிறதா இருந்தால், ஆறுமாதம் எடுக்கும். ஆனால் பிறைவேற்றாச் செய்யிறதாக இருந்தால் இண்டைக்கே ஒப்பரேசன் செய்யலாம் எண்ட கதைகளும் இருக்குது.

ஆக, எங்கட சனங்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு பிறைவேற் கொஸ்பிற்றல்களில சிகிச்சை பெற, அந்த இடைவெளியை வட மாகாணத்திற்கு வெளியில இருக்கிற நோயாளர்கள் நிரப்பிறதாக இருந்தால், அதற்குள்ள நீதித்தன்மை இருப்பதாக எனக்குத் தெரியல்ல.

இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** எங்கட யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில புதிய கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்பட்டு, நோயாளர் விடுதிகளும் இதர சுகாதாரப் பிரிவுகளும் உருவாகி வருவது நல்ல விடயம்.

அதேநேரம் புதிய புதிய பிரிவுகளை ஆரம்பிக்கும் போது அதற்கான ஆளணி தேவைப்படும்.

அந்த ஆளணியை அரசாங்கம் தான் வழங்க வேணும். இருக்கிற ஆளணியை பங்கிடும் போது ஆளணித் தட்டுப்பாடுகள் ஏற்படவே செய்யும்.

எனவே ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்தும் பொருட்டு, யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகமும் மருத்துவர்களும் இதர பணியாளர்களும் சேர்ந்து கதைத்துச் சிறந்த தீர்மானங்களை எடுக்க வேணும் எண்டொரு தீர்மானத்தை ஆலடியில எடுப்பம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆலடியில் இருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வாழ்க்கை வெறுக்கிறது வியாசரே. யாரும் இல்லாமல் தனியாக இருப்பது போலத் தோன்றுகிறதே?**

*அருமை*
*மானிப்பாய்*

குரங்கில் இருந்து தான் மனிதன் தோன்றினானா என்ற சந்தேகம் தற்போதைய மனிதனின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது தோன்றுகிறது.

அந்தளவிற்கு மனிதன் மனிதம் மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறான்.

அன்பு, கருணை, பாசம், ஈகை என்பவற்றை மறந்து செல்வம் சேர்க்கும் இயந்திரமாக மனிதன் மாறியிருப்பதே இள வயது இறப்புகளுக்கு முக்கிய காரணம்.

இந்த நிலை மாற வேண்டும். மீண்டும் மனிதன் மனிதனாக மாறவேண்டும்.

இல்லையேல் எங்களில் இருந்தா மனிதன் தோன்றினான் என்று குரங்குகளே மனிதனை இகழும் நிலை ஏற்பட்டு விடும்.

**கையில் காசிருந்தால்...?**

*மகாலட்சுமி*
*கொக்குவில்*

கையில் கொஞ்சம் காசு இருந்தால் நீ தான் அதற்கு எஜமான். கழுத்து வரைக்கும் காசு இருந்தால் அது தான் உனக்கு எஜமான்.

இது கவிஞர் வைரமுத்துவின் வைர வரிகள்.


எம்மிடம் பணம் இருக்கிறது என்பதற்காக அடுத்தவரிடம் பணம் இருக்கும் என்று நினைப்பது மகா தவறு.

இப்போது இங்கே மனிதனின் அந்தஸ்தை நிர்ணயிப்பது பணம் மாத்திரமே.

ஒருவரிடம் பணம் இருந்தால் அவர் கௌரவமானவர். பணம் இல்லையென்றால் கௌரவம் குறைந்தவர் என்பதே இன்றைய நிலை.

பிச்சை புகினும் கற்கை நன்றே என்பது மருவி, பிச்சை புகினும் பணக்காரனாகிடு என்று வந்து விட்டது.





**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி பற்றி வியாசரின் கருத்து என்ன?**

*குமார்*
*யாழ்ப்பாணம்*

இந்திய மீனவர்களின் மீன்பிடி முறை கடல் வளத்தை அழிப்பதாய் இருக்கிறது. இதனால் இந்திய கடல் பகுதியில் மீன்வளம் குறைந்து விட்டது.

இதன் விளைவே இந்திய மீனவர்களின் எல்லை தாண்டலுக்குரிய காரணமும்.

கடல் வளம் என்பது ஒரு நாட்டின் சொத்து. அதை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

தமிழக கடல் வளத்தை மேம்படுத்தினால் எல்லை தாண்டும் செயல் நடக்காது.

நாம் அனைவரும் ஓர் தாய் வயிற்றில் பிறந்தவர்கள். என் வளத்தை நீ எடுத்தாய் என்று அடிபடுவது சரியில்லை. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். அவ்வளவே.

**ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவை தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத் தருமா வியாசரே?**

*தமிழ்*
*யாழ்ப்பாணம்*

ஐக்கிய நாடுகள் சபை தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தரும் பொன்னான சந்தர்ப்பத்தை இழந்து விட்டது.

இதற்கு எமது தமிழ் அரசியற் தலைமைகளும் ஒரு காரணம் எனலாம்.

நல்லாட்சிக் காலத்தில் சர்வதேச அரங்கில் நின்று இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூற கால அவகாசம் வழங்குங்கள் என்று கைகளைத் தூக்கியவர்கள் எம் அறிவார்ந்த தமிழ்த் தலைவர்கள் என்று நினைக்கும் போது நெஞ்சம் கனத்துப் போகிறது.

காலாவதியான உணவு சாப்பிடுவதற்கு உகந்ததல்லவே. அது போலத்தான் தமிழினத்துக்கு நடந்த இன்னல்களும் காலாவதி ஆகி விட்டன போல.



**தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தர உள்ளகப் பொறிமுறை சாத்தியமாகுமா வியாசரே?**

*சுதன்*
*குப்பிழான்*

கொஞ்ச நாட்களுக்கு முன்னர் முன்னாள் எம்.பி ஒருவர் உள்ளக விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டது. இனித் தீர்ப்பு வழங்குவது தான் மிச்சம் எனத் தெரிவித்திருந்தார்.

தமிழினத்தை யார் பாதிப்புக்குள்ளாகினரோ அவர்களே பாதிக்கப்பட்டவர்களை விசாரணை செய்து அதில் உண்மைகளைக் கண்டறிந்து எமக்கான நீதியைப் பெற்றுத் தருவார்களாம்.

சில விடயங்கள் பேசுவதற்கு நன்றாக இருக்கும். ஆனால் நடைமுறைக்கு அது சாத்தியமாகாது. இதுவும் அதில் ஒன்று.

**எங்கள் ஊரில் உள்ள வைத்தியர் ஒருவர் நோகாமல் ஊசி போடுவாரே?**

*தவராஜன்*
*கொற்றவத்தை*

ஓ... அப்படியோ. எனக்குத் தெரிந்த வைத்தியர் ஒருவர் நோகாமல் நொங்கு குடிக்கிறார்.

நான் நுளம்பைச் சொன்னேன்.

**நம்பிக்கைத் துரோகங்களைச் செய்தவர்கள் அது தொடர்பில் வருந்துவது இல்லையே?**

*தாரு*
*வதிரி*

கொலைக் குற்றவாளிக்கும் கூட தன்பக்க நியாயம் என்று ஒன்று இருக்கவே செய்யும்.

நாளடைவில் அந்த நியாயம் அற்றுப்போக, தான் செய்த தவறை உணர்ந்து அதற்கு வருந்த வேண்டும்.

அது தான் மனித வாழ்வின் அர்த்தமும்.

ஆனாலும் கஞ்சியில் பயறு போல சில ஜென்மங்கள் செய்த தவறுக்கு வருந்தாமல் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

அவர்களை நினைத்து நாம் நம் மனதை அழுக்காக்குவதை விட அவர்களை நினைக்காமல் இருப்பதே மேலானது.

இறைவனின் தீர்ப்பு ஒன்று உண்டல்லவா? அந்தத் தீர்ப்பை யாவரும் பெற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

**யாழ்.நகரிலுள்ள சில தனியார் நிறுவனங்கள் நீண்ட நேரம் வேலை வாங்கி விட்டு குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறதே?**

*கஜீபன்*
*கோண்டாவில்*

நான் பெரிதும் மதிக்கும் மதிப்பிற்குரிய எனது ஆசான் அடிக்கடி கூறுவார்.

தொழிலாளி ஒருவன் வேலை செய்தால் அவனின் வியர்வை காய முன்னர் அவனின் உழைப்புக்கான சம்பளம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் அது மகாபாவம் என்று.

ஆனாலும் பண ஆசை பிடித்த முதலைகள் பலர் தொழிலாளர்களை காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை பிழிந்து எடுத்து விட்டு, சொற்ப சம்பளத்தைக் கொடுப்பது அறமான செயல் அல்ல.

நாம் கோடிகளில் இருக்கிறோம். எம்மிடம் எம்மை நம்பி இருப்பவர்களின் அடுப்பெரிய பணம் கொடுக்க வேண்டுமே தவிர வயிறு எரியும் படி நடந்து கொள்ளக்கூடாது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம்

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு**
**SMS, Whats App செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




படம்: அரசிளங்குமரி
பாடியவர்: சௌந்தரராஜன்
இயற்றியவர்: பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

சின்னப் பயலே சின்னப் பயலே
சேதி கேளடா நான் சொல்லப் போற
வார்த்தையை நன்றாய் எண்ணிப் பாரடா – நீ
எண்ணிப் பாரடா
சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அது தாண்டா வளர்ச்சி – உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு
அதுவே நீ தரும் மகிழ்ச்சி
ஆசையோடு ஈன்றவளுக்கு
அதுவே நீ தரும் மகிழ்ச்சி
நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி – உன்
நரம்போடு தான் பின்னி
வளரணும் தன்மான உணர்ச்சி – உன்
நரம்போடு தான் பின்னி
வளரணும் தன்மான உணர்ச்சி

சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா...

மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா – தம்பி மனதில் வையடா
மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா – தம்பி மனதில் வையடா
வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ
வலது கையடா – நீ வலது கையடா
வளர்ந்து வரும் உலகத்துக்கே
நீ வலது கையடா – நீ வலது கையடா
தனியுடைமைக் கொடுமைகள் தீர
தொண்டு செய்யடா – நீ தொண்டு செய்யடா
தனியுடைமைக் கொடுமைகள் தீர
தொண்டு செய்யடா – நீ தொண்டு செய்யடா
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா – எல்லாம் பழைய பொய்யடா

சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா...

வேப்பமர உச்சியில் நின்னு பேயொண்ணு ஆடுதுன்னு
வேப்பமர உச்சியில் நின்னு பேயொண்ணு ஆடுதுன்னு
விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க – உன்தன்
வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே – நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பிவிடாதே – நீ
வெம்பிவிடாதே

# பிட்காயின் புதையல்

**ஜேம்ஸிடம் 8000 பிட்காயின்கள் இருக்கின்றன. ஒரு பிட்காயின் 108,000 டொலர் என்ற விலையில், அவரிடம் உள்ள 8,000 பிட் காயின்களின் மொத்த மதிப்பு 864 மில்லியன் டொலர். இந்திய ரூபாய் மதிப்பில் 7,171 கோடி ரூபாய்க்கு மேல் வரும். ஆக, ஒரே ஒரு ஹார்ட் டிரைவ் கிடைத்தால் ஜேம்ஸ் பெரும் கோடீஸ்வரராகிவிடுவார்.**

1848 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் ஜேம்ஸ் மார்ஷல் என்பவர் தங்கம் இருப்பதாகக் கண்டுபிடித்தார். இந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியதால் சுமார் 3 லட்சம் பேர் கலிஃபோர்னியாவில் தங்கத்தைத் தேடிப் படையெடுத்தனர். இதை கோல்ட் ரஷ் காலம் என அழைக்கின்றனர். இப்போது 2025ஆம் ஆண்டிலும் அப்படிப்பட்ட பெரும் புதையலைத் தேடி 12 ஆண்டுகளாக ஒருவர் குப்பைக் கிடங்குகளைத் தேடி அலைந்து வருகிறார். இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், இவரது பெயரும் ஜேம்ஸ்!

கிரிப்டோ கரன்சிகள் பிளாக்செயின் டெக்னாலஜியின் அடிப்படையில் இயங்கும் டிஜிட்டல் கரன்சிகள் ஆகும். கிரிப்டோ கரன்சிகளிலேயே பிட்காயின் பிரதான கரன்சியாக இருக்கிறது. 2009 ஆம் ஆண்டில் பிட்காயின் முதல்முதலாக உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தில் நியூபோர்ட் நகரைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் ஹோவல்ஸ். இவர் 2009 ஆம் ஆண்டிலேயே இன்டர்நெட்டில் பிட்காயினை பற்றித் தெரிந்துகொண்டு மைனிங் மூலம் பிட்காயின்களை உருவாக்கியுள்ளார்.



அவரிடம் வாலட்டில் 8000 பிட்காயின்கள் இருந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் பிட்காயினுக்குப் பெரிய விலை எல்லாம் கிடையாது. தான் ஒரு ஐ.டி ஊழியர் என்பதால் ஏதோ டெக்னாலஜி மீதான ஆர்வத்தில் ஜேம்ஸ் அவ்வளவு பிட்காயின்களை உருவாக்கிச் சேமித்து வைத்திருக்கிறார்.

இந்த 8000 பிட்காயின்களை உருவாக்குவதற்கு அவர் எந்த செலவும் செய்யவில்லை.ஜேம்ஸ் தனது பிட்காயின் வாலட்டுக்கான பிரைவேட் கீ-யை ஒரு ஹார்ட் டிரைவில் வைத்துப் பாதுகாப்பாக வீட்டிலேயே வைத்திருக்கிறார். அந்த பிரைவேட் கீ இருந்தால்தான் பிட்காயின்களைப் பயன்படுத்த முடியும். 2013 ஆம் ஆண்டில் ஜேம்ஸின் பார்ட்னரோ விபரம் அறியாமல் தவறுதலாக அந்த ஹார்ட் டிரைவை குப்பையில் தூக்கி வீசிவிட்டார்.


இதற்கு பிறகுதான் பிட்காயின் கொஞ்சம் கொஞ்சமாக விலை உயரத் தொடங்கியது. குறிப்பாக 2020 ஆம் ஆண்டு கொரோனா பாதிப்பிற்குப் பின் பிட்காயின் விலை பட்டையைக் கிளப்பியது. இப்படி பிட்காயின் விலை உயர உயர, அந்தக் காலத்திலேயே பிட்காயின்களை வாங்கி வைத்தவர்கள் கோடீஸ்வரர்களாகிவிட்டனர். ஆனால், அந்த சமயத்தில் ஜேம்ஸ் தனது ஹார்ட் டிரைவைத் தேடி நியூபோர்ட் நகரின் குப்பைக் கிடங்குகளில் அலையத் தொடங்கினார். இதோ இப்போது வரை 12 ஆண்டுகளாகத் தேடி அலைந்து வருகிறார்.

ஜேம்ஸ் தனது வாலட்டில் 8000 பிட்காயின்களை வைத்திருப்பதாகச் சொல்கிறார். சமீபத்தில் பிட்காயின் விலை தடாலடியாக உயர்ந்து வருகிறது. இதற்குக் காரணம், அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தான். தான் ஆட்சிக்கு வந்தால் கிரிப்டோ கரன்சிகளுக்கு ஆதரவான சட்ட திட்டங்களைக் கொண்டு வருவேன் என ட்ரம்ப் பிரசாரம் செய்துவந்தார். டொனால்டு ட்ரம்ப் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுவிட்டார். இந்த நிலையில், பிட்காயின் விலை 108,000 டொலரைத் தாண்டிவிட்டது.

ஜேம்ஸிடம் 8000 பிட்காயின்கள் இருக்கின்றன. ஒரு பிட்காயின் 108,000 டொலர் என்ற விலையில், அவரிடம் உள்ள 8,000 பிட்காயின்களின் மொத்த மதிப்பு 864 மில்லியன் டொலர். இந்திய ரூபாய் மதிப்பில் 7,171 கோடி ரூபாய்க்கு மேல் வரும். ஆக, ஒரே ஒரு ஹார்ட் டிரைவ் கிடைத்தால் ஜேம்ஸ் பெரும் கோடீஸ்வரராகிவிடுவார். அதனால்தான், 12 ஆண்டுகளாக ஹார்ட் டிரைவைத் தேடி நியூபோர்ட் குப்பைக் கிடங்கை அலசி ஆராய்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மப் புத்தகம்



உலகின் மிக மர்மமான புத்தகம் என்று அறியப்படும் வொய்னிச் கையெழுத்துப் பிரதி பல நூற்றாண்டுகளாக அறிஞர்கள், வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி வருகிறது. யாராலும் இந்த வொய்னிச் கையெழுத்துப் பிரதியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றும் மர்மமாகவே உள்ளது.

வொய்னிச் கையெழுத்துப் பிரதி என்பது கையால் எழுதப்பட்ட கோடெக்ஸ் (ஒரு கையெழுத்துப் புத்தகம்). இது 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அதன் துல்லியமான தோற்றம் சரியாக அறியப்படாமலேயே உள்ளது.

இந்தக் கையெழுத்துப் பிரதியானது தாவரங்கள், வானியல் வரைபடங்கள் மற்றும் புதிரான மனித உருவங்களின் விளக்கப்படங்களால் அலங்கரிக்கப்பட்டு, 240 பக்கங்களைக் கொண்டுள்ளது.

Voynich கையெழுத்துப் பிரதியை வேறுபடுத்துவது சிக்கலான ஒன்றாக இருந்து வருகிறது. இது 25 முதல் 30 வித்தியாசமான எழுத்துக்களைக் கொண்ட ஒரு தனித்துவமான எழுத்து முறையாக இருக்கிறது.

பல ஆண்டுகளாக ஏராளமான அறிஞர்கள், மொழியியலாளர்கள் இந்த வொய்னிச் கையெழுத்துப் பிரதியைப் புரிந்துகொள்ள முயன்றுள்ளனர். அதன் இரகசிய செய்தியை அவிழ்த்து அதில் மறைக்கப்பட்ட தகவலைப் புரிந்துகொள்ள முயன்றனர்.

பல தசாப்தங்களாகத் தீவிர ஆய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தபோதிலும் கையெழுத்து புரிந்துகொள்ளப்படாமலே இருந்து வருகிறது.

வொய்னிச் கையெழுத்துப் பிரதி உண்மையில் என்னவாக இருக்கும் என்பதில் பல கோட்பாடுகள் உள்ளன. புத்தகத்தின் உள்ளடக்கங்கள் ரசவாத (இயற்கை தத்துவம்) ஆய்வுக்கட்டுரைகள், மூலிகை வைத்தியங்கள் அல்லது வேற்றுக்கிரகம் தொடர்பான தகவல்கள் இருக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர், ஆனால் எதுவும் திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை.

தற்போது வொய்னிச் கையெழுத்துப் பிரதியானது, ஐக்கிய அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் உள்ள பெனிக்கே அரிய புத்தகம் மற்றும் கையெழுத்துப் பிரதி நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது பார்வையாளர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் அதன் மர்மத்தால் தொடர்ந்து கவர்ந்திழுக்கிறது.

பல நூற்றாண்டுகள் ஆய்வு மற்றும் அனுமானங்கள் இருந்தபோதிலும், வொய்னிச் கையெழுத்துப் பிரதி இன்றும் ஒரு புதிராகவே உள்ளது.

வொய்னிச் கையெழுத்துப் பிரதி அதன் இரகசிய உலகில் தொடர்ந்து பயணிக்கிறது. இது அடுத்த தலைமுறைகளுக்கும் ஆச்சரியத்தை நிச்சயம் அளிக்கும்.

# ஆச்சி அறிவுரை



## காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை

## பேராண்டி...

"காங்கேசன்துறையில சீமெந்து தொழிற்சாலை இருந்தது உனக்குத் தெரியுமோ? காங்கேசன்துறைச் சீமெந்துக்கு இலங்கையில இருந்த கிறாக்கி உனக்குத் தெரியுமோ? ஓம் பேராண்டி, காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலை 1950ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 700 ஏக்கர் நிலப்பரப்பிலை தொழிற்சாலை இருந்தது எண்டுரதையும் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் அதிலை வேலை செய்தவை எண்டுறத்தையும் கற்பனை பண்ணிப் பார்த்தால் அதுன்ர தரமும் உயர்ச்சியும் உனக்கு விளங்கும்.

1960-80களில கீரிமலை மாவிட்டபுரம் பகுதிகளில வீட்டுக்கொரு அரச உத்தியோகத்தர் இருந்தினம் எண்டதை உன்னால நம்ப முடியுதோ? எல்லாம் அந்த சீமெந்து தொழிற்சாலை போட்ட பிச்சைதான்.

அந்தக்காலம் பொற்காலம் எண்டுதான் சொல்ல வேணும். அந்தளவுக்கு குறை ஒண்டும் இல்லாமல் ஆரோக்கியமா, சந்தோஷமா வாழ்ந்ததுகள் எங்கட சனம். காங்கேசன்துறைப் பகுதியில இருக்கிற சுண்ணக்கல் சீமெந்துக்குத் திறம். அதுதான் காங்கேசன்துறை சீமெந்துக்கு அவ்வளவு பவரைத் தந்தது. மாவிட்டபுரம் சந்தியிலை இருந்து கீரிமலை றோட்டிலை இருமருங்கும் இருக்கிற அரச காணிகளில சீமெந்துக்காக சுண்ணக்கல் எடுக்கிற குவாரி இருந்தது. வெடி வைச்சுதான் கல்லு உடைக்கிறது. வெடி வைக்கிற நேரத்திலை கீரிமலை - மாவிட்டபுரம் வீதி மூடப்படும்.

வெடி வெடிச்சா 50-60 அடி உயரத்துக்கு புழுதி கிழம்பும். புழுதி அடங்க பெரிய புள்டோசர்களால கல்லை டிப்பரிலை ஏற்றி பக்ரறிக்கு கொண்டு போவினம். வெடி வைச்சதுக்கு பிறகு வெடி வைச்ச வயர் கல்லுக்குள் கிடக்கும். அதை எடுக்கிறதுக்கு சின்னப் பிள்ளையள் ஓடிப்போவினம். அது ஆபத்தானது.

ஒருநாள் கொப்பாவும் வெடி வயர் எடுக்கப் போய் நிக்க, அங்க உன்ர தாத்த வந்திட்டார். பிறகென்ன, கொப்பா குழறிக் கொண்டு ஓடி வந்தான். அவ்வளவு அடி. அதுக்குப்பிறகு கொப்பர் அந்தப்பக்கம் போறதில்லை.


சீமந்து தொழிற்சாலையில காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரைக்கும், பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரைக்கும், இரவு 10 மணியிலிருந்து அடுத்தநாள் காலை 6 மணி வரைக்கும் எண்டு வேலை மூன்று சிப்ற் ஆ நடக்கும். உன்ர தாத்தா பக்கிங் பிளான்ட்டில வேலை செய்தவர். அவருக்கு சம்பளத்தை விட மாதா மாதம் இரண்டு பார் சோப்பும், ஒரு போத்தல் நல்லெண்ணையும் குடுப்பினம். அதைவிட வருடா வருடம் மழைக்கோட்டும் கம்பூட்சும் குடுப்பினம்.

1960களில எங்கட ஊரில கரண்ட் இல்லை. அதால இரவு 10-6 வேலைக்குப் போற ஆக்கள் ஒண்டா சேர்ந்து சூழ் லாந்தர் கொண்டுதான் போவினம். அந்தக் காலங்கள நினைச்சா இனியொருமுறை அப்பிடி சந்தோஷம் வராதோ எண்டு மனம் ஏங்குது பேராண்டி. இப்ப காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை கொள்ளையடிக்கப்படுகுது. இருந்த இரும்பு எல்லாத்தையும் களவு எடுத்துப்போட்டாங்கள். ஒரு நாட்டின்ர சொத்தை கொள்ளை அடிக்க எப்பிடித்தான் மனசு வருதோ? தமிழினத்தின்ர சொத்துத்தானே அதைக் கொள்ளை அடிச்சால் கேக்கிறதுக்கு ஆள் இல்லை எண்டுற நினைப்பால எங்கட சொத்து - முதுசம் சோபை இழந்து கிடக்குது.

இப்பயும் மிச்சம் மீதி இருக்கிற இரும்புகள் களவு போவதாக பத்திரிகைச் செய்திகளைப் பார்க்க நெஞ்சு பதை பதைக்குது.

எத்தின குடும்பத்துக்கு சோறு போட்ட இடம். அதை இப்பிடிச் செய்யிறாங்களே! கடவுளே! காங்கேசன்துறை சீமெந்து பக்ரறி திரும்பவும் இயங்க வேணும். எங்கட தமிழ்க் குடும்பங்கள் தலை நிமிர வேணும். இதைத்தான் மாவைக்கந்தனிட்டையும் கீரிமலைச் சிவனிட்டையும் நான் அடிக்கடி கேட்கிறது.

**ஆச்சி வருவா...**



மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

46

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜாவைச் சுட்டுக் கொல்ல முயன்றமைக்காக ரி.ஜீவராஜா, பூபதி பாலவடிவேற்கரசன், எஸ். சபாலிங்கம், பாலகிருஸ்ணன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுக் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

*09 மார்ச் 1973 ஆம் திகதி* மாவை சேனாதிராசா, கே. சிவராஜா, ரி. எம். குமாரசாமி, தனபாலசிங்கம் (செட்டி). சி. பத்மநாதன் (கண்ணாடி), சந்திரகுமார், ஆர். இரத்தினகுமார்,எம். பாலரத்தினம் ஆகிய எண்மர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைத் தொடர்ந்து ரீ.சதாரத்தினம் (படா), ரி. ராஜலிங்கம் ஆகியோர் கைதாகினர்.

*31 மார்ச் 1973ஆம் திகதி* பருத்தித்துறைக்கு அண்மையில் 20000 டிற்றோனேற்றர்ஸ்களுடன் யோகச்சந்திரன் (குட்டிமணி), ஞானக்கமலம் ஆகிய இரு இளைஞர்கள் கைதாகினர். தீவிரவாதத் தமிழ் இளைஞர்களாகக் கருதப்பட்ட த. முத்துக்குமாரசுவாமி, புஸ்பராஜா வரதராஜா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

எனவே, ஒகஸ்ட் 1973, ஆம் திகதியளவில் நாற்பத்தொரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். பத்தொன்பது வயது இளைஞர் ஒருவரைப் பொலிஸார் சலடைபோட்டுக் கைது செய்யத் தேடித்திரிந்தனர். அவரே வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆவார்.

கைதாகிக் கோட்டை குயின்ஸ் ஹவுசுக்குக் கொண்டு வரப்பட்ட இளைஞர்கள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை முதலான பொலிஸ் அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டனர். சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத கேவல முறைகளைப் பிரயோகித்துச் சந்தேக நபர்களை தொல்லைப்படுத்தி முறைப்பாடுகள் பெறப்பட்டன.நீண்ட நேரமோ, கடினமாகவோ, சித்திரவதை மூலமோ வினாத் தொடுத்து பொலிஸார் சாட்சியம் பெறும் முறைகள் "தேர்ட் டிகிரி மெதட்ஸ்" (Third Degree Methods) எனப்படும். கைதாகிய இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் மீது சுமத்தப்பட்ட சம்பவங்கள் பொய்யனாவையல்ல.

கோட்டைக் குயின் ஹவுசில் கைதாகிய இளைஞர்கள் பல தடவைகள் சித்திரவதைக்கும் விசாரனைக்குமுள்ளாகினர். 03, ஒகஸ்ட், 1973 ஆம் திகதியும், 04 ஆம் திகதியும் சி. குவேந்திரராஜா இந்த மாளிகையில் வைத்து சப் இன்ஸ்பெக்டர் விக்னேஸ்வரராவால் விசாரனைக் குட்படுத்தப்பட்டார்.

*31 ஜூன் 1973 ஆம் திகதி*யிலிருந்து சில நாட்கள் வே.சுப்பிரமணியம் (மணியம்) இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளையால் இங்கு வைத்து விசாரிக்கப்பட்டார்.

(தொடரும்...)

---

# கடல் புறா

“அதுமட்டுமல்ல இளையபல்லவரே, வேறொருவரிடமிருந்தும், பாதுகாப்பளிக்கும், அந்த...” என்று ஏதோ சொல்லப்போன அமீரைத் தடைசெய்த இளைய பல்லவன், “அமீர்! அந்தப் பெயரைச் சொல்லாதே. இங்கு சுவர்களுக்கும் ரகசியத்தைக் கேட்கும் சக்தி உண்டு. பலவர்மன் ஒற்றர்கள் சதா நம்மீது கண் வைத்திருக்கிறார்கள். சொல்லி வந்த அந்த மனிதர் இதில் சம்பந்தப்பட்டிருப்பது நம்மிருவருக்கு மட்டும் தெரிந்திருக்கட்டும். வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்,” என்று எச்சரிக்கையும் செய்தான்.

சரியென்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிய அமீரின் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்தது. இருவரும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதால் நீண்ட நேரம் அந்த அறையில் மௌனமே நிலவியது. அந்த அறையிலிருந்த விளக்குச் சுவர்கூட அந்த ரகசியத்தின் விளைவுகளைப் புரிந்து கொண்டது போல் கடற்காற்றில் அலைந்து இரண்டு மூன்று முறை நடுங்கியது. காற்றும் பயந்து கொண்டு கிழக்கு வாயிற்படிக்கு மேலேயிருந்த துவாரங்களின் வழியாக மெல்லவே அறையில் நுழைந்தது. அத்தகைய சூழ்நிலையில் தன் பஞ்சணையை நோக்கி நடந்து அதில் உட்கார்ந்துகொண்ட இளையபல்லவன் தலையை முழந்தாள்களை நோக்கித் தொங்கப் போட்டுக் கொண்டு பல நிமிடங்கள் யோசனையில் ஆழ்ந்தான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து அமீரை அருகில் அழைத்து. “தலையைக் குனி” என்றான்.

அமீர் தலையைக் குனிய அவன் காதுக்கருகில் ஏதோ மடமடவென்று கூறினான் இளையபல்லவன். அந்தச் சொற்களைக் கேட்கக் கேட்க அமீரின் முகத்தில் இருந்த வியப்பு. திகைப்பு எல்லாம் மறைந்து உற்சாகமும் குதூகலமும் குடிகொள்ளத் தொடங்கின. இளையபல்லவன் பேசி முடித்ததும் நன்றாக நிமிர்ந்து நின்றுகொண்ட அமீர் ராட்சதச் சிரிப்பு சிரித்தான். “மிகவும் சரி, மிகவும் சரி” என்று கூறி இளையபல்லவனின் கருத்தை ஆமோதிக்கும் முறையில் தலையைப் பலமாகவும் ஆட்டினான். அத்துடன் இளையபல்லவனிடம் விடை பெற்றுக்கொண்ட அமீர் தன் மனத்திலிருந்து பெரும் சுமையொன்று இறங்கிவிட்டதற்கு அடையாளமாகப் பெரும் மகிழ்ச்சியுடன் மாடிப்படிகளில் இறங்கிச் சென்றான்.

நாட்கள் நான்கு ஓடின. அந்த நான்கு நாட்களில் நடந்த பல விடயங்களின் காரணம் அக்ஷய முனையிலிருந்து பல பேருக்குப் புரியவில்லை. புரியாததால் அதைப் பற்றி நானாவிதமாக நகர மக்கள் பேசவும் முற்பட்டார்கள். அந்தப் பேச்சுகள் மஞ்சளழகியின் காதிலும் விழுந்ததால் அவள் பெரிதும் நிலை குலைந்தாள். அடுத்த சில தினங்களில் இளையபல்லவன் வெறி பிடித்தவனைப் போல் நடந்து கொண்டதையும் கண்டபடி முன்னுக்குப் பின் முரணான உத்தரவுகளைப் பிறப்பித்ததையும் கண்ட நகர மக்கள் ஒருவேளை சோழர் படைத் தலைவன் மூளை குழம்பி விட்டதோ என்றுகூட நினைத்தார்கள்.

மறுநாளிலிருந்து தனக்குக் காவலர் யாரும் தேவையில்லையென்று மாடியறைக் காவலரைக் கூடக் கடற்கரைக் குடிசைகளுக்கு அனுப்பி விட்ட இளையபல்லவன், தினசரி இரவிலும் பகலிலும் குடியில் இறங்கி பலவர்மன் மாளிகையில் பெரும் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தான். ஊருக்குள்ளும் தாறுமாறாகத் திரிந்துகொண்டு கண்ட சண்டைகளை விலைக்கு வாங்கிக் கொண்டான். குடிக்காமலிருந்த வேளைகளிலும் அவன் போக்கும் உத்தரவுகளும் விபரீதமாயிருந்தன. இரண்டு நாள்களுக்கெல்லாம் தலை நீட்டிய அமாவாசை இரவில் வெகு வேகமாகக் கடற்கரையை அடைந்த இளைய பல்லவன் கொள்ளையரில் சிலரைக் கூட்டி அவர்கள் மரக்கலங்களில் இரண்டை உடனடியாகப் பாய் விரித்துக் கடலில் செல்லும்படி உத்தரவிட்டான். அந்த மரக்கலமொன்றில் தனது மாலுமியொருவனையும் அனுப்பி விவரம் புரியாத பல உத்தரவுகளையும் பிறப்பித்தான்.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 141

**ஊதல், ஊதல்,ஊதல்**
**ஊதினால் சாதல், சாதல், சாதல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

439

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கைமாறு


என்னைச் சுற்றி தீப்பந்தங்கள் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. எனது பேரக்குழந்தைகள் எனக்குப் பந்தம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கையில் இருக்கின்ற அந்தத் தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் எல்லோரையும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அவர்கள் நடுவே நான் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறேன். நான் இத்தனை வருடங்கள் வாழ்ந்து முடித்ததில் தேடிக் கொண்ட உறவுகள், நண்பர்கள் எனப் பலர் என்னைச் சுற்றி நிற்கின்றனர். எல்லா நிலைகளிலும் அவர்கள் என்னைத் தாங்கியவர்கள். எனது சுக துக்கத்தில் பங்கெடுத்தவர்கள். எனக்கு அனுசரணையாக இருந்தவர்கள். என்னை வழி நடத்தியவர்கள். இப்போது என்னை வழி அனுப்பக் கூடி நிற்கின்றனர்.

எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நானும் எனது அப்புவும் சேர்ந்து முற்றத்தில் நட்ட மாமரம் நிழல் பரப்பி நிற்கிறது. பருவ காலத்தில் பூத்துக் காய்த்து பழமாக எம்மை ஆசுவாசப்படுத்த ஒரு போதும் அந்த மாமரம் தவறியதில்லை. அதன் கீழ் இடப்பட்ட ஒரு தற்காலிகப் பந்தலின்கீழ் என்னை கிடத்தியிருக்கிறார்கள். நேற்று இரவு கூட நான் குழை முறித்துப்போட்ட ஆட்டுக்குட்டி பசியில் கத்தும் குரல் கேட்கிறது. என்னைச் சுற்றி நடப்பவைகளை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

"கிழவனுக்கு நல்ல நிறைவான சா" என யாரோ பேசிக் கொள்வது கேட்கிறது. சாவிலும் நிறைவு இருக்குமோ? அவர் எதை நினைத்து இப்படிச் சொல்லியிருப்பார்? பாயில் கிடந்து அழுந்தாமல் நான் செத்துப் போனதைச் சொல்லியிருப்பாரோ? அல்லது நான் கடைசி வரை பிள்ளையின் அனுசரணையுடன் 'நான்' என்ற இறுமாப்புக் குன்றாமல் இருந்து செத்துப்போனதைச் சொல்லியிருப்பாரோ? சில சமயம் நான் சாதிக்க வேண்டியவற்றை எல்லாம் சாதித்து என் கடமைகள் எல்லாவற்றையும் முடித்து சந்தோஷமாகச் செத்துப்போனதாக நினைத்துக்கூட அவர் அதைச் சொல்லியிருக்கலாம். எண்ணங்களின் அலை மோதலுக்குக் குறைவில்லாமல் என் மனம் அங்கலாய்த்துக் கொள்கிறது.

இலேசாக வீசிய அந்தக் காற்றுக்குத் தம்மை ஈடுகொடுக்க முடியாத சில பழுத்த மாவிலைகள் உதிர்ந்து அந்தப் பந்தலில் விழுந்தன. அவை என்னை ஆசீர்வதிக்கின்றன என்றுதான் நான் நினைக்கிறேன். மனிதர்களைப்போலத்தான் மரங்களும் உணர்வுள்ளவைகள் எனச் சொல்லக் கேட்கிறேன். மனிதர்களோடு மரங்கள் பேசியதாகக் கதைகள் உண்டு.



கொள்ளி வைக்க ஆயத்தமாக நிற்கும் என் ஒரே மகன் தலை முழுகி, பூநூல் தரித்து , நெற்றியில் திருநூற்றுப் பூச்சுடன் இன்னும் விக்கி விக்கி அழுதுகொண்டிருக்கிறான். அவன் அப்படித்தான். இன்று மட்டுமல்ல, முன்பு சிறியவனாக இருக்கும் பொழுதுகூட பள்ளிக்கூடம் போவதற்கு இதே மாதிரித் தான் அழுவான். போயும் போயும் இந்தத் தொண்ணூறு வயதுக் கிழவன் செத்துப் போனதற்கு அழுகிறானே! அவனுக்கு ஆறுதல் சொல்ல நினைக்கிறேன். முடியவில்லை. எனது வாய் எனக்கே அந்நியமாகிப் போய் இருக்க. அதற்குள் வாய்க்கரிசி என்ற பெயரில் மஞ்சள் கலந்த அரிசியும் பொரியும் சேர்த்தொரு கலவை போடப் பட்டிருக்கிறது.

நான் பூரணமாக வாழ்ந்து முடிந்தாகி விட்டதாகவே எண்ணுகிறேன். பேரப்பிள்ளைகளையும் அவர்கள் கூட ஒரு பூட்டப் பிள்ளையையும் கண்டு அவர்களோடு பேசிக் கதைத்து விளையாடிய சந்தோஷங்களையும் அனுபவித்தாயிற்று. இனியும் ஏன் வருத்தம், துன்பம் என்று பாயில் கிடந்து அவதிப்பட வேண்டும்? எனக்கு இனி விடுதலை. இதற்குப் போய் இவன் அழுதுகொண்டிருக்கிறானே? ஒன்றும் அறியாத பாவம் அவன்.

சில நாட்களுக்கு முன் "டேய்! என்னுடைய சவத்திலையும் முழிக்கக் கூடாது எனக்கு நீ கொள்ளியும் வைக்கப்படாது." என நான் அவனைப் பார்த்துப் பேசிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வருகிறது.

எதற்காக நான் இப்படிச் சொல்ல வேண்டி வந்தது? என்னை இவ்வாறு சொல்ல வேண்டிய கட்டாயத்துக்குள் கொண்டு வந்ததும் அவன்தான். இப்பொழுது மட்டும் ஏன் விக்கி விக்கி அழுதுகொண்டிருக்கிறான்? ஊர் உலகத்திற்காகவா இப்படி அழுகிறான்?

இல்லை. இல்லை, ஒருக்காலும் அப்படி இருக்க முடியாது. அவன் என் பிள்ளையாச்சே, அவனை எனக்குத் தெரியும். அவனின் 'பொய்' அழுகையையும் 'மெய்' அழுகையையும் வித்தியாசப்படுத்தவும் எனக்குத் தெரியும். தன் தந்தை இறந்து போனார் என்பதற்காகத்தான் அவன் அழுது கொண்டிருக்கிறான் என்பதை நான் நன்கு அறிவேன். உண்மையான பாசம் என்று சொல்லுவது வெறும் வெளிப்பூச்சல்ல. அது ஒருவனுக்குத் தன்னை அறியாமலே வெளிப்படுவதொன்று. அது அவனின் ஊனிலே உறைந்து போயிருக்கும் ஓர் உள்ளுணர்வு என்று தான் சொல்ல வேண்டும்.

இவன் சின்னவனாக இருந்த காலம் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கிறது. சரியான குழப்படி. சொல்லே கேட்க மாட்டான். மண்ணில் படுத்து உருளுவான். மண்ணை அள்ளித் தலையில் போடுவான். எல்லாவற்றையும் எறிந்து உடைப்பான். புத்தகம் கொப்பிகளைக் கண்டால் கிழிப்பான் அல்லது கிறுக்கி வைப்பான். ஒரு நாள் எங்கள் வீட்டுக் கோழியைக் கூடப் பிடித்துக் கிணற்றுக்குள் போட்டுவிட்டான். அதனைப் பார்த்த எனக்குக் கோபம் வரவில்லை. மாறாகச் சிரிப்புத்தான் வந்தது.

"ஏன்டா இப்படிச் செய்தனி?" என்று கேட்டால் பிஞ்சு மொழியில் அதற்கும் ஒரு விளக்கம் சொல்வான். ஆனால் எனக்கு ஏனோ கோபம் வருவதில்லை. அவன் புத்தி தெரியாத பிள்ளை. இவற்றை எல்லாம் சகித்துக்கொள்ள வேண்டியது எனது கடமை என்பதுவும் எனக்குத் தெரியும்.

அதேபோல நானும் தளர்ந்து போய் புத்தி சற்றுத் தடுமாறிப்போய் இருக்கும் நேரத்திலே கதைப்பவற்றையும் செய்பவற்றையும் அவன் அமைதியாகத் தாங்கிக் கொண்டால் என்ன? இந்தத் தொண்ணூறு வயதுக் கிழவனைக் கண்டிக்க இவன் யார்? அதற்காகத்தான் அன்று இவனை ஏசவேண்டி இருந்தது.

பாவம்..! அவனுக்கு ஓயாத வேலைதான். அமைதியாக வீட்டில் உறங்கக்கூட அவனுக்கு நேரம் போதாது. ஏன்? நானும் ஒரு காலத்தில் இதே போல ஆயிரம் விடயங்களைச் செய்து பல இடக்கு முடக்குகளைச் சந்தித்துப் பல அலுவல்கள் பார்த்தவன்தான்.

(தொடரும்...)

Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**'Keels' விற்பனை நிலையம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.**



**தமிழ்நாடு, காந்தி கிராமிய பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற இனவரைவியல் பன்னாட்டு ஆய்வரங்கில் ஆதார சுருதி உரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களுக்கு காந்தி கிராமப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.பஞ்சநதம் அவர்களினால் தமிழர் இனவரைவியல் ஆய்வுகளுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.**

# திருவுருவச்சிலை திறப்புவிழா




(யாழ்ப்பாணம்)

ஈழத்துப் புலமை மரபின் உன்னத அடையாளமான வித்துவ சிரோமணி கணேசையரின் திருவுருவச் சிலை அவர் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய மருங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்துவ சிரோமணிக்கான ஊரவர்களின் காணிக்கையாக அமைந்த திருவுருவச் சிலையை யாழ். பல்கலைக்கழக சிற்பத்துறைத் தலைவர் சிற்பக் கலைஞர் மா.மனோகர் தத்துவரூபமாக வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மகோற்சவ விஞ்ஞாபனம்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மத்தி பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபன பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மகோற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-8)


## ஜனவரி மாத 'Cash Bonanza' வெற்றியாளருக்கு பத்து இலட்சத்தை SLT Mobitel பரிசளித்தது

விளம்பர விபரணம்




தொலைத்தொடர்பாடல் துறையில். இலங்கையின் மாபெரும் வாடிக்கையாளர் வெகுமதித் திட்டமாக அறியப்படும். SLT-MOBITEL இன் 'Cash Bonanza' திட்டத்தின் ஜனவரி மாத வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த R.யஜிந்தனுக்கு SLT-MOBITEL ரூ.1,000,000 பெறுமதியான பணப்பரிசை அன்பளிப்புச் செய்தது.


இந்த அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு பெப்ரவரி 25 அன்று மொபிடெல் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் SLT-MOBITEL இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் பிரதி பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் மில்லியனர்களை உருவாக்கியமைக்காக புகழ்பெற்றுள்ள SLT-MOBITEL இன் 'Cash Bonanza', இவ்வருடமும் அனைவரும் வெற்றியாளராக திகழ்வதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊடாக அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு ரூ. 3 மில்லியன் பெறுமதியான பணப்பரிசை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும் மேலும் ரூ.1 மில்லியன் பெறுமதியான பணப்பரிசுத் தொகையை மாதாந்தம் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

நீங்களும் வெற்றியாளராக விரும்பினால் ரூ.100 எனும் சிறிய ரீலோட் செய்வதன் மூலம், ரீலோட் மூலமான பிளான் செயற்படுத்தல் மூலம் அல்லது SLT Mobitel Mobile இணைப்பிற்கான பட்டியலை செலுத்துவதன் மூலம் Cash Bonanza திட்டத்தில் பங்கேற்க முடியும்.

SLT-MOBITEL முன்னெடுத்துள்ள இத் தேசிய மட்ட வெகுமதித் திட்டம், நாடெங்கும் உள்ள அதன் விசுவாசமிகு வாடிக்கையாளர்களிற்கு அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கக்கூடிய பணப்பரிசை வெல்லும் வாய்ப்பை வழங்குகிறது.


# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள் சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறை, நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு தற்கால சமயநிலை பற்றி ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் உரையாற்றவுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழு நெடுந்தீவுக்கு கள விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நெடுந்தீவுக்கான களவிஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இந்தக் களவிஜயத்தின்போது நெடுந்தீவு பிரதேச மக்களது மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் பொது அமைப்புகளிடமும் பொது மக்களிடத்திலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கல்வி மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் தை.தனராஜ், ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன் வில்லவராயன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ், ஆணைக்குழுவின் மனித உரிமை அலுவலர் செல்வி குமுதினி சேவியர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா, வேலணை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜெயக்குமார் மற்றும் தீவக கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.தருமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு மக்களது பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்தனர். (நி-8-33)

# இலவச யோகக்கலை பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகக்கலைப் பயிற்சி நெறியின் (அடிப்படை) புதிய பிரிவு - யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 08.03.2025 தொடக்கம் 3 மாத காலப்பகுதி வரை வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களில் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணிவரை நடைபெறவுள்ளன.

இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவம் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து இப் பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 100 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1300 | 1400 |
| தக்காளி | 100 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 400 |
| கரட் | 850 | 800-900 | 800 | 1000 |
| பூசணி | 120 | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 150 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 180 | 200 |
| பாகற்காய் | 450 | 350 | 450 | 500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 380 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 300 | 250 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 900 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2000 | 2800 |
| போஞ்சி | 150 | 250 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 250 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 250 | 200 | 200-280 |
| இராசவள்ளி | 500 | 400 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 100 | 200 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 80 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 200 |

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளான கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை (வகை II), எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம் (வகை II), மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் (வகை II), மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம் (வகை III), நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலயம் (வகை III) ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருப்பதுடன் வகை-II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-II ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் அதிபர் வகுப்பு-II ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-III ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

வகை-III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-III ஐ உடையவர்களாக இருப்பதுடன் மாகாணக் கல்வி அமைச்சின் "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இலக்கமான 2023/03, 2023/03A இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

வலய நேர்முகத்தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு சேவை நிலையம் வழங்கப்படும்.

மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 14.03. 2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் 'வலயக் கல்விப் பணிப் பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)




## தேயிலை தொழிற்சாலை குத்தகைக்கு

வட்டவள பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான ஹொரதொல தோட்டத்தில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலை மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு உண்டு.

- நில அளவு : 23,142 சதுர அடி
- தொழிற்சாலை கொள்ளளவு - 8400 கி.கி
- உற்பத்தி செயன்முறைக்கான பொருத்தமான இயந்திரங்கள், உபகரணவசதிகள் உண்டு.
- மின்சார இணைப்பு வசதிகள் உண்டு. தண்ணீர் குழாய் இணைப்புகள் பழுதுபார்க்கப்பட வேண்டும்.

டெண்டர் பத்திரங்களை 24.03.2025ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

விற்பனை அதிகாரி
வட்டவள பெருந்தோட்ட கம்பனி
இல.754/5, கண்டி வீதி, வெதமுல்ல, களனி
076-896 7326

Quick Ads (சி-084)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரட்ணசபாபதி கிண்ண கால்பந்தாட்டம்

# கிண்ணத்தை சுவீகரித்தது

# நெல்லியடி மத்திய கல்லூரி



அகிலதீபனின் ஹெற்றிக் கோலுடன் நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையிலான ரட்ண சபாபதி கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டி நேற்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் பாதியாட்டத்தில் பல நிமிடங்கள் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் விதமாக விளையாடினர்.

இருப்பினும் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் அகிலதீபன் மிக நேர்த்தியான கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர்.

இருப்பினும் ஆட்டம் நிறைவடைவதற்கு 5 நிமிடம் இருக்கும் போது நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் அகிலதீபன் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (நி-8-90)


## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01, 06 இற்கான மாணவர் அனுமதி 2026

1. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 03.03.2025 முதல் 28.03.2025 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 28.03.2025.
2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
3. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. வயதெல்லைகள்:
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2020இற்கும் 31.01.2021இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2015இற்கும் 31.01.2016இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
5. தமிழ் அல்லது இருமொழி மூல கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்
6. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதியும் தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சைக்குரிய திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

**தரம் 12 (A/L 2027) இற்கான அனுமதி**

❖ தரம் 12 இற்கான (A/L 2027 Batch) விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கணிதம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கலை (தமிழ் மொழிமூலம்), தொழினுட்பவியல் (தமிழ் மொழிமூலம் சென். ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும்), விண்ணப்பங்கள் அந்தந்த கல்லூரிகளில் க.பொ.த சா/த பரீட்சை 2024(2025) பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு :**

❖ தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

❖ சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் தகுதியான மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**அதிபர்கள்** (சி-2353)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வமஹாலின் தலைமகன்– இன்று**
**தலைசாய்ந்து மாதம் ஒன்று ஆனதோ**
**அவனியில் நீங்கள் அனைத்திலும் சிறந்தவர்**
**கல்வியில் நீங்கள் பேராசிரியர்.**

**ஏன் இந்த அவசரம்–ஐயா**
**விண்ணுலகத்தை தரிசிக்க விரைந்து சென்றதேனோ**
**உங்களுக்காய் வாழ்ந்த மனைவியை**
**விட்டுச் செல்ல எப்படி ஐயா மனம் வந்தது.**

**மீண்டும் புதுப்பொலிவுடன் வந்துவிடுவீர்கள்**
**என்றிருந்த உங்கள் பாலகர்கள்**
**இன்று கதிகலங்கி நிற்கின்றார்கள்–பப்பா**
**என்ன கூறித் தேற்றுவோம்.**

**நோயுற்ற போதிலும் உங்கள் மனம் வாடியதில்லை**
**உங்கள் குரல் தளம்பியதில்லை**
**உறவுகளுடன், நண்பர்களுடன் நான் வருவேன்**
**என்று கூறிய வார்த்தைகள் பொய்யாகிப் போனதே.**

**கல்வி உலகின் பெருவிருட்சமாய்**
**முகாமைத்துவ உலகின் வழிகாட்டியாய், கலாநிதியாய்**
**துறைத்தலைவராய், பீடாதிபதியாய், பேராசிரியராய்,**
**வாழ்த்து எழுதிய எங்களுக்கு**
**கண்ணீர் அஞ்சலி எழுத மனம் மறுக்கிறதய்யா.**

**கண்களில் நீர்பொழிய கைகள் நடுநடுங்க**
**இலக்கியம் தடுமாற இலக்கணம் தமிழ்மாற**
**எப்படி எழுத முடியும்?**
**உங்கள் புகழை எப்படிப் பாட முடியும்?**

**உங்கள் ஆத்மா இறைவன் அடியில் சாந்தியடையட்டும்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



அமரர்.உயர்திரு
## பேராசிரியர் அம்பலம் புஸ்பநாதன்

மலர்வு–1964.03.24 உதிர்வு–2025.01.31

**செல்வமஹால், அல்வாய்.** **குடும்பத்தினர்** (C-2352)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நானே திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது வாழ்வின் மிகப்பெரிய பரிசாகும்.

– அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை சாத்தியமாகக் கூடியதா?

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையேனும் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு களத்தில் இறங்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கட்சிகளிடம் உண்டு.

இது விடயத்தில் ஏலவே சங்குச் சின்னத்தில் பொதுத் தேர்தலைச் சந்தித்த தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் முயன்று வருகின்றன.

எனினும் எதிர்பார்த்த இலக்கை அவர்களால் அடையமுடியவில்லை என்பதை உணர முடிகின்றது.

ஆம், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற அடிப்படையில் சில தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்தன.

தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பின் ஏற்பாட்டினூடாக ஒற்றுமைப்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பொது வேட்பாளராக அரியநேத்திரன் களமிறக்கப்பட்டார்.

இருந்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதற்கு உடன்படவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரித்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டது.

இந்நிலையில் படுதோல்வியும் இல்லை. உச்சமான வெற்றியுமில்லை என்பதாக தமிழ்ப் பொது வேட்பாளருக்கான வாக்குகளின் எண்ணிக்கை அமைந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் அநுர குமார திஸாநாயக்கவை நோக்கி நகரவில்லையாயினும் தமிழ் அரசியல் கட்சிகள் எவையும் தமிழ் மக்களிடம் உச்சமான செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை என்ற உண்மையை தேர்தல் முடிவுகள் உணர்த் தின.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இங்கு தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்துகின்ற முயற்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஆட்களும் இல்லை. காலஅவகாசமும் இருக்கவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்ற முடிவை தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்த தமிழ்க் கட்சிகள் எடுத்தன.

ஆயினும் சி.வி.விக்னேஸ்வரனைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ் மக்கள் கூட்டணி சங்குச் சின்னத்தில் போட்டியிடாமல், தங்களுக்கு உரித்தான மான் சின்னத்தில் போட்டியிட்டது.

ஈற்றில் தேர்தல் முடிவுகள் எப்படியாக அமைந்தன என்பதை யாம் கூறி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

உண்மையில் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்டிருக்க வேண்டும். அதையும் தவறினால், பொதுத் தேர்தலில் அந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பொதுத் தேர்தலில் ஒற்றுமை பற்றி எவரும் பேசவே இல்லை.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது சாத்தியப்பாடானதல்ல.

அந்தத் தேர்தல் முற்குறிப்பிட்ட இரண்டு தேர்தல்களினின்றும் வேறுபட்டதென்பதால், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது குறிப்பிடத்தக்க வெற்றியைத் தராதெனலாம்.

## எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை

# எரிபொருள் நிரப்பு உரிமையாளர்களால் திட்டமிட்டு பிரச்சினை உருவாக்கப்பட்டுள்ளது

### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ

சமூகத்தில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப்போவதுமில்லை. விலைத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உரிமையாளர்களால் இந்தப் பிரச்சினை திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகத் தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் சமூகத்தில் காணப்படும் நிலைமைக்குமிடையில் பரஸ்பர நிலைமையே காணப்படுகிறது. உண்மையில் சமூகத்தில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப் போவதுமில்லை. எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கருகில் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு பொறுப்பு கூற வேண்டியது யார் என்பது சரியாக இனங்காணப்படவில்லை. எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லையென சமூக வலைத்தளங்களில் பரவலாகத் தகவல்கள் பகிரப்படுகின்றன. குறிப்பிட்டவொரு சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நபரொருவர் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளிலிருந்து தாம் விலகுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் எரிபொருள் விநியோகம் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுகிறது. அவ்வாறிருக்கையில் சமூக வலைத்தளங்களில் எதற்காக இவ்வாறான செய்திகள் பரப்பப்பட்டன என்பது தெரியவில்லை. எரிபொருள் விநியோக செயற்பாடுகளை சீர்குலைப்பதற்காகவே திட்டமிட்டு இவ்வாறான சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதன் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் எரிபொருள் விநியோக நடவடிக்கைளிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இவ்வாறு பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. தாம் விநியோக செயற்பாடுகளிலிருந்து விலகுவதாகக் கூறிவிட்டு முற்பதிவுகளை வழமை போன்று செய்திருக்கின்றனர். சில விநியோகஸ்தர்கள் வழமையை விட அதிகளவில் எரிபொருட்களை முற்பதிவு செய்திருக்கின்றனர் என்றார். (ம-7)

# ரணில் அரசு இயற்றிய சட்டங்களே நாடு ஸ்திரமடைவதற்கு காரணம்

### முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது அரசாங்கம் கடுமையான சூழ்நிலையில் பல புதிய சட்டங்களை இயற்றியதால் தான் நாடு இன்று பொருளாதார ரீதியில் ஸ்திரமடைந்துள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

எம்மால் முன்வைக்கப்பட்ட சட்ட வரைபுகளை திருத்தங்களுடன் சட்டமாக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன் என்று முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

2022 செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் நீதி இராஜாங்க அமைச்சராக செயற்பட்டேன். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அத்தியாவசியக் காரணிகளை கருத்திற் கொண்டு பல சட்டங்களை இயற்றினோம். 2022 ஆம் ஆண்டு 14 சட்டங்களும், 2023 ஆம் ஆண்டு 11 சட்டங்களும், 2024 ஆம் ஆண்டு 11 சட்டங்களும் இயற்றப்பட்டன.

கடுமையான சூழ்நிலையில் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டதால் தான் நாடு இன்று பொருளாதார ரீதியில் ஸ்திரமடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

90 சட்ட வரைபுகள் குறித்த குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆகவே அவற்றை சட்டமாக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம்.

நீதிமன்ற கட்டமைப்பு முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும். இதற்குக் குறைந்தது 3.2 பில்லியன் ரூபா செலவாகும் என்ற மதிப்பிடப்பட்டது.

தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அது சாத்தியமற்றது என்பதை அறிவோம். இருப்பினும் நீதிமன்ற கட்டமைப்பை டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்பாட்டை கட்டம் கட்டமாக முன்னெடுக்க வேண்டும்.

ஏதேனும் குற்றச்செயலின் சந்தேக நபராக கருதப்படும் நபரை வீட்டுத் தடுப்புக் காவலில் வைக்கும் வகையில் சட்டத்திருத்த வரைபினை முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அமைச்சரவைக்கு முன் வைத்திருந்தார். ஆகவே இந்த வரைபை சட்டமாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2024 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவை சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. தடுப்புக் காவலில் இருந்த சந்தேக நபருக்கு தண்டனை தீர்ப்பு வழங்கும் போது அந்த நபர் தடுப்புக்காவலில் இருந்த காலத்தையும் அவரது தண்டனை காலத்துக்குள் உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த சட்டத்துக்கான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெல்வத்த பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (28) கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவராவார். (ம-7)

## தேசபந்து தென்னகோனுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவானது. மாத்தறை நீதவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னகோன் உட்பட கொழும்பு குற்றப் பிரிவின் முன்னாள் அதிகாரிகள் எட்டு பேரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் சந்தேக நபர்களாகப் பெயரிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசிபலன்கள்-2025



கிரகநிலை - ராசியில் செவ்வாய் -சுக ஸ்தானத்தில் கேது -பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி -தொழில் ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** எளிதில் யாருடனும் நண்பராகும் திறமை பெற்ற மிதுன ராசியினரே! இந்தமாதம் நீண்ட நாட்களாக இருந்து வந்த வீண் மனக் கவலை நீங்கும். எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாக கிடைக்கும். ஒதுங்கி இருந்தால் கூட வலுக்கட்டாயமாக எதிலாவது ஈடுபட சுற்றமும், நட்பும் தூண்டுவார்கள். கவனமாக அதைத் தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சல், செலவு ஏற்படலாம். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை.

தொழில், வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். வருமானம் வந்து சேரும். புதிய முயற்சிகள் கால தாமதமாக முடியும். வாடிக்கையாளர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்த்து அனுசரித்து பேசுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணியை கவனிக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளிடமும் சக பணியாளர்களிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது.

## வருமானம் வந்து சேரும்

குடும்பத்தில் அமைதி ஏற்பட குடும்ப உறுப்பினர்களிடம் நிதானமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. விருந்தினர்கள் வருகையும் அதனால் செலவும் உண்டாகலாம். வழக்குகளைத் தள்ளிபோடுவதும் பேசி தீர்த்துக் கொள்வதும் நல்லது. ஆயுதம், தீ ஆகியவற்றில் கவனம் தேவை.

பெண்கள் அடுத்தவர்கள் பேச்சை கேட்டு எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மை தரும். வீண் அலைச்சலும், செலவும் உண்டாகலாம் கவனம் தேவை. கலைத்துறையினர் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். அதனால் வெளியூர் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை.

அரசியல்துறையினருக்கு உங்கள்




புத்திக்கூர்மை உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள்.

உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். மாணவர்களுக்கு உயர் கல்வி பற்றிய எண்ணம் அதிகரிக்கும். கூடுதல் மதிப்பெண் பெற படிப்பில் வேகம் காட்டுவீர்கள்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்:** தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு நிறைய மறைமுக எதிர்ப்புகள் உண்டாகும். எதிர்பார்க்கும் வங்கி கடனுதவிகளும் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு புதிய முயற்சிகளில் ஈடுபட முடியாது. வரும் வாய்ப்புகளையும் பிறர் தட்டிச் செல்வார்கள். நிறையப் போட்டிகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**திருவாதிரை:** பணவரவுகளிலும் திட்டங்களிலும் நெருக்கடிகள் குறையும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய காலகட்டம். தேவையற்ற வாக்குவாதங்களால் குடும்பத்தில் ஒற்றுமை குறைவதோடு உற்றார் உறவினர்களும் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். பணிபுரிபவர்களுக்கு தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகும்.

**புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்:** பெயர், புகழைக் காப்பாற்றிக் கொள்ள அதிக முயற்சிகளை மேற் கொள்ள வேண்டியிருக்கும். எடுக்கும் காரியங்களையும் சரிவரச் செய்து முடிக்க விடாமல் உடனிருப்பவர்களே தடையாக இருப்பார்கள். குடும்பத்திற்காக நிறைய செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையும் உண்டாகும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் பெருமாளை வணங்கி வர கடன் பிரச்சினை தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி
**சந்திராஷ்டம தினங்கள்:** 24, 25, 26
**அதிஷ்ட தினங்கள்:** 18, 19, 20



கிரகநிலை - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது -அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி - பாக்கிய ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - இலாப ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிரன் பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம்

## பயணங்கள் செல்ல நேரிடலாம்

ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** கவலைகளை வெளிக் காட்டாமல் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படும் கடக ராசிக்காரர்களே! இந்த மாதம் சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். எதிர்பார்த்த காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்கு நாணயம் உண்டாகும். முக்கிய நபர்களின் நட்பு கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். அடுத்தவரை பற்றி எந்த பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது.

தொழில், வியாபாரம் தொடர்பாக கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். உழைத்த உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். தொழில், வியாபாரம் பற்றிய விடயங்களில் நேரடி கவனம் தேவை. தேவையான பணம் தக்க நேரத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக எதையும் செய்வது நல்லது. வீண் அலைச்சல் வேலைப்பளு ஆகியவை இருக்கும். உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை தோன்றி மறையும் ஆனாலும் குடும்பதிபதியின் பாதசார சஞ்சாரத்தால் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். ஒரு நல்ல குறிக்கோளுக்காக புண்ணிய பயணம் செய்ய வேண்டி இருக்கும். ஆடம்பரப் பொருட்கள், வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.

பெண்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். அடுத்தவரைப் பற்றி எந்த பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது. கலைத்துறையினர் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். மேலிடத்திலிருந்து உங்களுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். வெளியூர்ப் பயணம்




மேற்கொள்வீர்கள். அரசியல்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள்.

வருமானம் நன்றாக இருக்கும். செலவும் அதிகமாகும். தொண்டர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கையில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் உழைப்பது அவசியம். மாணவர்கள் கல்வி தொடர்பான விடயங்களில் நேரடியாக கவனம் செலுத்துவது நல்லது. பாடங்களில் சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசிரியர் உதவி கிடைக்கும்.

**புனர் பூசம் 4 ஆம் பாதம்:** உடல் நல பாதிப்புகளால் அடிக்கடி அவதிப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. நல்ல நண்பர்களை தேர்ந்தெடுத்துப் பழகுவது சிறந்தது. மாணவர்கள் கல்வியில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும்.

**பூசம்:** எதிலும் எதிர்நீச்சல் போட்டே முன்னேற வேண்டியிருக்கும். வீண் பழிச் சொற்கள் உண்டாகலாம். தேவையற்ற இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். சொகுசு வாழ்விலும் பாதிப்பு ஏற்படும். ஆனாலும் எதையும் எதிர்கொள்ளும் பலம் உண்டாகும்.

**ஆயில்யம்:** உடல் ஆரோக்கியத்தில் நீங்கள் அதிக கவனம் எடுத்துக் கொள்வது நல்லது. பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் எதிர்நீச்சல் போட வேண்டி வரும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்குப் போட்டிகள் அதிகரிப்பதால் வாய்ப்புகள் கைநழுவும் எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

**பரிகாரம்:** சிவன் கோயிலுக்கு சென்று சிவன், அம்பாளை நெய் தீபம் ஏற்றி வழிபடுவது மனக்குழப்பத்தை நீக்கும். தெளிவான முடிவுகள் எடுக்க உதவும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, திங்கள், வியாழன்
**சந்திராஷ்டம தினங்கள்:** 26, 27, 28
**அதிஷ்ட தினங்கள்:** 19, 20, 21

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடி - ரணில்...

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

இந்தியாவில் நடைபெறும் NXT கருத்தரங்கின்போது இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சமூக வலைத்தளப் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் "எனது நண்பர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தேன். எங்களுக்கிடையிலான தொடர்பாடல்களை எப்போதும் நான் விரும்புகின்றேன். பல்வேறு விடயங்கள் தொடர்பிலான அவரது கண்ணோட்டங்களை நான் மதிக்கின்றேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இரணைமடுக்...

வருகின்றது.

எனவே கூடுதல் நீரை வெளியேற்றும் நோக்கில், நான்கு வான்கதவுகள் 6 இஞ்சி அளவுக்கு திறக்கப்பட்டுள்ளது.

இதனால் குளத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், கந்தளாய் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் பத்து வான்கதவுகளும் நேற்று சனிக்கிழமை திறக்கப்பட்டுள்ளன. (ம-7)

## சொந்தமான...

குறைத்தல் மற்றும் நிதிப் பொறுப்புக்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறு ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான வாகனங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 09 டிபெண்டர் ரக ஜீப்கள், வொல்வோ ரக ஜீப் ஒன்று, கரயிஸ்லர் ரக வாகனம் ஒன்று, மஹேந்திரா பொலெரோ வாகனம் ஒன்று, ரோஸா பஸ் ஒன்று, டிஸ்கவரி வாகனம் மற்றும் டொயாடோ மோட்டார் வாகனம் உள்ளடங்கலாக 15 வாகனங்கள் நேற்று முன்தினம் ஏலமிடப்பட்டிருந்ததுடன், மிகுதி வாகனங்களும் விரைவில் ஏலமிடப்படவுள்ளன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர பணிக்குழாமிற்காக வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் இல்லை என்பதுடன், முன்னாள் ஜனாதிபதியினால் தனது பதவிக் காலத்தில் அரசியலமைப்பின் 41 (1) உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் பணிக்குழுவினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களாகும்.

இந்த வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு பெருமளவான கேள்வி காணப்பட்டதுடன் ஏலக் கேள்விகள் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிவரையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து இரவு 8.00 மணி வரை ஏலம் இடம்பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 199 வர்த்தகர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## வட மாகாணத்தில்...

பொலநறுவை மாவட்டங்களில் எதிர்வரும் சில தினங்களுக்கு அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-7)

## 2009ஆம்...

கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசு இதுவரை இனவாதம்பேசவில்லை இதனை வரவேற்கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு பலமான சக்தி. இதனை முழுமனதோடு ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழர்கள் நாம் நீதி கேட்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். ஜனாதிபதியும் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். நடந்தால் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிரவேறொன்றுமில்லை.

யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை குறிப்பாக கணவரை மனைவியும் மகன், மகளை பெற்றோரும் வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய முன்றலில் இராணுவத்திடம் ஒப்படைத்தார்கள். அதுதவிர தடுப்பு முகாம்கள், கடல் எனப் பல இடங்களிலும் எமது உறவுகள் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்டவர்களை கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ்களில் இராணுவத்தினர் கொண்டு சென்றனர்.

படையினரிடம்தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில்லையே அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள். நீதி அமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள்.

வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பேருந்தில் ஏற்றிக் கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பேருந்துகள் மட்டும் திரும்பி வந்ததாகவும் மக்கள் சொல்கின்றார்கள். வட்டுவாகல் தனித் தமிழ் சைவக் கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தவர்களை கொண்டு சென்று, படுகொலை செய்து புதைத்துவிட்டு அதன்மேல் இவ்வாறு பெரிய விகாரை இங்கு அமைத்து விட்டதாத மக்கள் கூறுகின்றனர். உங்களின் மடியில் கனமில்லை என்றால்இதனை நிரூபியுங்கள் என்றார். (ம-7,299)

## அரசி...

நாயக்க தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

பாதாள உலகமும் சில துறைகளும் அரசைக் கட்டுப்படுத்தும் ஒரு வலையமைப்பை உருவாக்கியுள்ளன.

கடந்த காலத்தில் அனைத்து அரசாங்கங்களும் பாதாள உலக நபர்களால் கட்டுப்படுத்தப்பட்ட இந்த வலையமைப்பிற்கு அடிபணிந்தன, ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கள் அடிபணியப் போவதில்லை மாறாக சவால்களுக்கு முகங்கொடுக்கும். நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் இடமளிக்கப்போவதில்லை.

அண்மைய காலங்களில் மாத்திரம் வெவ்வேறு பகுதிகளில் 06 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விரைவில் புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்படும். இருப்பினும், தகவல்களை நாங்கள் இப்போதே வெளியிட போவதில்லை. அவ்வப்போது தகவல்களை வெளியிடுவது சந்தேகநபர்கள் தப்பிக்க உதவும்" என்று ஜனாதிபதி கூறினார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 6762
M 7 5 9 3 3 3
அத சம்பத
M 9 3 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 0337
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1792
Y 19 46 68 75 Y
Double Chance 53435

மெகா பவர்
திகதி 01/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2110
V 04 15 55 64 67

ஜய
திகதி 2025.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 0030
K 4 3 8 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4004
சீட்டிழுப்பு திகதி 01.03.2025
K 39 55 57 71
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 1071
கடகம் 37 44 45 56 கடகம்
59207 43

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.03.2025 வெற்றி வாரம் 470
X 9 7 1 5 3 1
56794
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,633,374.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2736
சீட்டிழுப்பு திகதி 2025.03.01 தினம் சனிக்கிழமை
35 53 64 74 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,400,434.40
DLB

சனிதா
திகதி 01.03.2025 வெற்றி வாரம் 4897
25 45 54 65 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,262,064.80
55111
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 633
சீட்டிழுப்பு திகதி 01.03.2025
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 20 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4448
சீட்டிழுப்பு திகதி 01.03.2025 தினம் சனிக்கிழமை
12 41 54 61 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.15,584,281.60
129757
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 02 04 31 42 75
1912
01.03.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,016,489.40
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2562
சீட்டிழுப்பு திகதி 2025.03.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,962,550.40
06 14 27 37 Q
874220
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**UK BUSINESS VISITOR VISA**

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET

வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை
பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள் நீங்களே
நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த

- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்
- போன்ற அனைத்து சேவைகளுக்கும்...

தொடர்புகளுக்கு

V2 TRAVELS 0777068777

(C-2356)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்றுமதில், பொளிகல்லு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

தொடர்பு : 077 984 8786

(3550)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600

(3549)

## சிங்கள மொழி
(வெறும் 10 நாட்களில் முழுமையாக பயிற்சி)

யாழ். நகரில் குறுகிய நாட்களில் சிங்கள மொழியினை கற்றுக்கொள்வதற்கான அறிய சந்தர்ப்பம்

- 10 நாட்களில் முழுமையாக எழுத - பேச பயிற்சி
- உங்கள் வசதிகளுக்கேற்ற வகுப்புக்கள் - குழு, தனி

நேரடி மற்றும் Zoom வகுப்புக்கள்

077 695 4530

(3546)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

Special offer 50% Discount to all the Courses

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(3426)

தேன் ஒரு அருமருந்து, சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது,

Royal

## றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

(C-2355)

## வத்தளையில் வீடு விற்பனைக்கு

வத்தளை வெலிசறை பிரதான வீதிக்கு மிக அண்மையில் 28 பேர்ச்சஸ் காணியில் 03 மாடி வீடு விற்பனைக்கு.(03ம் மாடியில் இரண்டு வீடும், 02ம் மாடியில் ஒரு வீடும் உண்டு.)03 Electricity, 03 water line, 03 phare line, CCTV Camara சோளர்பவர் சுற்று மதில் கட்டப்பட்ட தோட்டத்துடனான வீடு.

075 537 7388

(026)

## கட்டிடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் நகரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கஸ்தூரியார் வீதியில் 9.5 x 35' அடி நீள அகலம் கொண்ட கட்டிடம் வாடகைக்கு. நகைக்கடை / வர்த்தகம்/ வியாபாரம் மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்தது.

தொடர்பு:077 479 6715

(3547)

## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலிச் சந்தியில், அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

074 38 25 961
076 91 97 566

(3509)

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி விதானையார் லேனில் 1 ½ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

0777 109 638

(3548)

## காணி விற்பனைக்கு

நெல்லியடி கரவெட்டியில் 18 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

076 742 4301, 075 710 9639

(3548)


# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி தியாகரராசா (மனோன்)



தோற்றம் 30.07.1946 மறைவு 01.03.2025

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.1010/17 கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடியை (கண்ணன் இசைக் குழு ஒழுங்கை) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி (மனோன்) தியாகராசா அவர்கள் நேற்று (01.03.2025) சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சோமசுந்தரம், பரராசசிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வசந்தகுமார் (Serendip be the change Foundation - Senior Programme Officer, Jaffna Former Seniour field officer of the GTZ - JRP, UNICEF, UNHCR Delft Piradeshiya Sabha Development Officer), ரவிக்குமார், சிறிசாந்தகுமார்(Spain), ஜெயக்குமார் (Norwich, UK), ரஜீவ்குமாரி(சசி) (சிற்றுண்டிச்சாலை நடத்துனர், சண்டிலிப்பாய், பிரதேச செயலகம்), யசோதினி(Norwich,UK), வலன்ரைன்(Norwich,UK), ரூபன் (Malaysia) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றொசானி (Development Officer - DS Office,Sandilipay), துளசிகா, கிரிஜா (Spain), துசியந்தி (Norwich, UK), கனொக்ஸ் மரினோ(St. Patrick's College), அனா ஒபிரின் (lavalai Convent M.V), அனன்சியாமெர்லின்(lavalai Convent M.V), திவிசன் (J/ Kokkuvil Hindu Primary School), ஆதீசன்(Kokkuvil Pre School), கிஷானி(Spain), பிரஜித் (Spain), சஞ்ஜித்(Spain), சஸ்மிகா(Norwich, UK), ரமோதயன்(யா/மகாஜன கல்லூரி), சமீனா (யா/மகாஜன கல்லூரி), ஏனோசியன்(அளவெட்டி ஞானோதயம் சீனன்கலட்டி வித்தி), யமிசன்(Norwich, UK), ரவோன் (Norwich, UK), ஜோஜினா (Norwich, UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2025 செவ்வாய்க்கிழமை காலை 07 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 09 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.1010/17, கே.கே.எஸ் வீதி,
(கண்ணன் இசைக்குழு ஒழுங்கை)
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
வசந்தகுமார், ரவிக்குமார் (சசி)
077 238 8083, 077 411 8881,
075 148 0512

(3551)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg கடலை | - 425/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2860/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | Max 2Kg |
| 1Kg மல்லி | - 380/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | ~~1050/=~~ |
| 330g டிகிரிமாறி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ |
| 1 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |
| 1 மீன்ரின் | - 410/= | ~~700/=~~ |

400g Anchor 1000/= ~~1050/=~~

129/= ~~165/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(890)



## கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்



### GCE O/L - 2024/ 2025

க.பொ.த சாதரண தர மாணவர்களுக்கான
இலவச மாதிரி வினாத்ததள்கள்

கணிதம் – தமிழ்

பிரபல கணிதம், தமிழ்ப் பாட ஆசிரியகளால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களை கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

: 077 959 2260

(3544)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.